பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 06 புதன்கிழமை (18.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:084

பொதுசன நூலகம்

# இரு தரப்புக்களும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்

## மக்களைக் காப்பாற்ற கூட்டமைப்பு அவசர வேண்டுகோள்



கொழும்பு, பெப்ரவரி 18

வன்னியிலுள்ள பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. மக்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்துகொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் தினமும் விமானத்தாக்குதல்கள் ஆட்லறி பல்குழல் பீரங்கிக் குண்டுவீச்சுகள் மூலம் நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்படுகின்றனர்; காயமடைகின்றனர்.

மக்களை மீட்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இப்படியான கொடூரங்களை அரசு செய்துகொண்டிருக்கிறது. இதற்குப் பெயர்தான் மீட்பா? இதுதான் மக்களை மீட்கும் லட்சணமா? வன்னியில் உணவும் இல்லை. மருந்தும் இல்லை. மக்கள் மர நிழல்களில் வாழ்ந்து அவலப்படுகின்றார்கள். (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு; ஆளுநர் வருகிறார்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்.மாவட்ட ஒருங்கிணைபுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம் முன்னர் அறிவிக்கப் பட்டது போன்று நாளை யாழ்.செயலகத்தில் நடை பெறும்(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், பெப்.18

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் 48 தமிழர்களின் உயிர்கள் பறிப்பு! பாதுகாப்பு வலயத் தாக்குதலில் 126 பேர் படு காயமுற்றனர்!!

கொழும்பு, பெப்.18

வன்னியில் உள்ள மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்றும் நடத்தப் பட்ட ஷெல் தாக்குதலில் 48 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 126 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, தேவிபுரம் மற்றும் வள்ளிபுனம் ஆகிய பகுதிகள் மீது நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட ஷெல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 30 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு 2,000 கிலோ மீற்றர் தூரத்துக்கு மனிதச்சங்கிலி!



சென்னை, பெப்.18

ஈழத்தில் இனப் படுகொலையை உடனடியாக தடுத்து நிறுத்தக்கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் தமிழ்நாடு தழுவிய மனிதச் சங்கிலி அறப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மொத்தம் 2 ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்துக்கு நடைபெற்ற இந்த மனிதச் சங்கிலி போராட்டத்தில் 30 லட்சத்திற்கும் அதிகமானோர் (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற ஐ.நா காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை

## கவலையும் அதிர்ச்சியும் தெரிவிக்கின்றனர் விடுதலைப் புலிகள்

கொழும்பு, பெப். 18

அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களை காப்பாற்றுவதிலும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் அர்த்தமுள்ள, காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் போக்கு- நிலைப்பாடு- குறித்து நாம் மிகுந்த கவலை கொண்டுள்ளோம்; அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

போரை நிறுத்துவதே இன்றைய உடனடித் தேவை. அதனைச் செய்யாமல், என்ன நடைபெறுகிறது என்ற உண்மை நிலையை நேரில் வந்து கண்டறியாமல், பிழையான தரப்பு மீது பயனற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டிருக்கும் தேவையற்ற பணியில் ஐ.நா. ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது- என்றும் பா. நடேசன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டி உள்ளார்.



அவரது அறிக்கையின் முக்கிய பகுதிகள் சில வருமாறு:-

இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரினாலேயே(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இரண்டு மாதங்களில் இரண்டாயிரம் பொதுமக்கள் பலி

### 4,500 பேர் காயம்; கூட்டமைப்பு அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, பெப். 18

வன்னியில் கடந்த இரு மாதங்களில் இரண்டாயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்; சுமார் 4 ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா. சம்பந்தன் இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் காயமடைந்த இருவர் திருகோணமலையில் உயிரிழப்பு

திருகோணமலை, பெப். 18

வன்னியில் இருந்து நேற்றுமுன்தினம் திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட - காயமடைந்த - பொதுமக்களில் இருவர் உயிரிழந்தனர். மேலும் 15 பேர் வெவ்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கந்தளாய், பொலநறுவை, தம்பலகாமம், வவுனியா, கண்டி ஆகிய வைத்திய சாலைகளுக்கே அவர்கள் கொண்டுசெல்லப்பட்டனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து வன்னிக்கு இன்று உணவுப்பொருள்களுடன் கப்பல் புறப்படும்

திருகோணமலை, பெப்.18

வன்னி மக்களுக்குத் தேவையான அத்தியவசிய உணவுப் பொருள்களுடன் திருகோணமலையில் இருந்து கப்பல் ஒன்று இன்றுபுறப்பட்டு அங்குசென்றடைய உள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையுடன் இந்தக் கப்பல் அங்கு செல்வதாகத் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தலைவர்கள் தப்பிச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் கோரக்கூடுமாம்

## கோத்தபாய ராஜபக்ஷ வெளியிடும் கருத்து

கொழும்பு, பெப்.18

புலிகளின் தலைவர் பிரபாகரன் இங்குதான் இருக்கிறார். ஏனைய தலைவர்களையும் அழைத்துக் கொண்டு வெளிநாட்டுக்குப் போய்விட அவர் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கக்கூடும். அவர்கள் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை. வெளிநாடு போவதா, அல்லது இங்கேயே இருப்பதா அல்லது தற்கொலை செய்வதா என்று இன்னும் முடிவெடுக்காமல் இருக்கிறார்கள்.

இவ்வாறு கூறியிருக்கிறார் பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் எதிர்காலம் என்னவென்று தெரியாமல் இருக்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் இன்றைய நிலைமைக்கு அவர்களே காரணம் - என்றும் கூறினார் கோத்தபாய ராஜபக்ஷ.

சரணடைந்த போராளிகள் தப்பி வெளியேறியுள்ள பொதுமக்கள் மற்றும் இலத்திரனியல் தொடர்புகள் முதலியவற்றின் மூலம் கிடைத்துள்ள புலனாய்வுத் தகவல்களை வைத்துக் கொண்டு பாதுகாப்புச் செயலர் தமது கருத்துக்களை கூறினார் என்று 'ரொய்ட்டர்' செய்தியாளர் பிறைசன் ஹல் எழுதியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாகக் கூறப்பட்டிருப்பதாவது:

காலம் கடத்துவதற்காக மக்களை அவர்கள் தடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்புக் கேடயமாக அவர்களைப் பயன் படுத்துகிறார்கள். தாங்கள் தப்பிச் சென்றதன் பின்னர் இந்த மக்கள் அம்போ என்று கைவிடப்படுவார்கள்.

### தப்பிச்சென்று அரசியல் தஞ்சம் கோருவர்

இன்று புலிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் போரின் பல்வேறு வெற்றிகளுக்கும் இவரே முக்கிய காரணகர்த்தா என்று கருதப்படுகின்றது. சுமார் 142 கிலோ மீற்றர் பரப்பெல்லைக்குள் (52 சதுர மைல்) முடக்கப்பட்டுள்ள பேராளிகளுக்கு மரண அடி கொடுப்பதற்கு இலங்கை இராணுவம் தயா, .கி வருகிறது.

புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் எங்கே செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் வழமையாக ஆள்களை கடத்திச் செல்லும் வழிகள் ஊடாக தப்பிச் சென்று அவர்கள் அரசியல் தஞ்சம் கோரக்கூடும்.

பொதுமக்களை மனிதக் கேடயமாக புலிகள் பாவிக்கிறார்கள் என்பதை அவர்கள் மறுத்துவருகிறார்கள். சுமார் 2 லட்சம் மக்கள் போர் நடைபெறும் பகுதிகளில் இருப்பதாக உதவிவழங்கும் முகவர் அமைப்புகள் கூறுகின்றன. ஆனால் 50 ஆயிரம் அல்லது 70 ஆயிரம் பேர்தான் அங்கு இப்போது எஞ்சியிருக்கிறார்கள். 10 நாள்களில் 30 ஆயிரம் பேர் போர்நிறுத்தப் பகுதிக்குள் வந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதேசமயம் போர் நடக்கும் பகுதிகளில் இருந்து வெளியேற முயலும் பொதுமக்கள் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தி மோதல் நடக்கும் பகுதிகளின் மிக ஆழமான பகுதிகளுக்குள் துரத்துகிறார்கள் என்று அங்கிருந்து தப்பி வந்துள்ள கத்தோலிக்க கன்னியாஸ்த்திரிகளும் வேறு பலரும் கூறியுள்ளார்கள்.

இன்னும் இரண்டொரு தினங்களில் அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளில் எவருமே இருக்க மாட்டார்கள்.

பொதுமக்கள் பாரிய அபாயத்தை எதிர் நோக்குகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுக்கு அருகாமையில் ஆட்லறிகளையும், மோட்டார் குண்டுகளையும் பாவிக்கலாகாதென கண்டிப்பாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதனால் போர் நகர்வு மிகவும் தாமதமடைந்திருக்கிறது.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் பெரிய எடுப்பில் கூறப்படுவது வெறும் பிரசாரம். இறந்தவர்களில் பெரிய அளவில் புலிகளும் இருக்கலாம். இவர்கள் பொது மக்கள் போல உடை அணிந்தவர்களாக இருக்கலாம்.

ஒரு மாதத்தில் சுமார் 1,000 பேர் காயமடைந்துள்ளார்கள். எமது தாக்குதல் திறமையையும் எமது படையினரின் பயிற்சித் தரத்தையும் கொண்டு பார்க்கையில் புலிகள் தரப்பில் ஏராளமானவர்கள் பலியாகி இருக்கமுடியும். அவர்கள் எல்லாம்எங்கே? புலிகள் தரப்பில் சேதமே இல்லையென்றுஎவரும் சொல்லமுடியுமா - என்று கேட்டார் கோத்தபாயராஜபக்ஷ.

(ப)

# ஊர்காவற்றுறையில் பிரிவுசார விழா

ஊர்காவற்றுறை, பெப்.18

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கடந்த 11 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் முன்னாள் அதிபர் அருட் திரு ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளாரின் பிரிவுசார விழா இன்று காலை 8.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழா அதிதிகள் அனைவரும் ஊர்காவற்றுறை சந்தியில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படவுள்ளனர். இவரின் காலத்திலேயே ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(1-227)

# நியமனம்வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,பெப்.18

வடக்கு மாகாண பொதுச்சேவையில் சமூகசேவை உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என யாழ். பிராந்திய ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(1-7)

# கூட்டுறவுச் சங்கங்கள் ஏ-9 பாதையூடாக பொருள்கள் எடுத்துவர ஏற்பாடு செய்யப்படும்

## சங்க நிர்வாகிகளிடம் அமைச்சர் தெரிவிப்பு

குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தாமே பொருள்களை நேரடியாக கொள்முதல் செய்யவும், அவற்றை முன்னுரிமை அடிப்படையில் ஏ-9 பாதையூடாகக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை அமைச்சரின் யாழ். பணிமனையில் நடைபெற்ற யாழ். மாவட்ட கூட்டுறவுத்துறை சார்ந்த உயர்மட்ட மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 24 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர்கள் ஆகியோருடன் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம், யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு.பிரதீபன், யாழ். செயலக பிரதான கணக்காளர் ஆகியோர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், வட மாகாண விசேட செயலணித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாடு குறித்து அமைச்சினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மாநாட்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குவதற்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் சங்கங்களை இலாபகரமாக இயங்க வைப்பதற்கான வழிவகைகள் குறித்தும் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் சங்கங்கள் பெற்றுக்கொண்ட கடனை சலுகை அடிப்படையில் மீளச் செலுத்துதல் மற்றும் ப.நோ.கூ சங்கங்களின் தேவைகள், வேண்டுகோள்கள் உள்ளடங்கிய கோரிக் கைகளும் விரிவாக ஆராயப்பட்டன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளினால் தெரிவிக்கப்பட்ட வேண்டுகோள்கள் தொடர்பிலான கோரிக்கைகளில் கவனம் செலுத்திய அமைச்சர் யாழ். அரசாங்க அதிபர், கூட்டுறவு.ஆணையாளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களின் கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களை யும் பெற்றுக்கொண்டதுடன் உடனடித் தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாடு மற்றும் சீரான செயற்பாடுகளை முன்கொண்டு செல்வது, அதன் மூலம் சரியான இலக்கினை நோக்கிச் செல்வது என மேற்படி மாநாட்டின் இறுதியில் முடிவெடுக்கப்பட்டது - என்று உள்ளது. (அ)

# 15 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நினைவுப் பேருரை



அதிபர் ஒறேற்றர்

**சி.சுப்பிரமணியம்**

**B.A(Lond)**

அவர்களின்

தலைவர்: **ஆறு திருமுருகன் (அதிபர்)**

காலம்: இன்று *(18.02.2009)* புதன்கிழமை பி.ப. 1 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

**நினைவுப் பேருரை**

விடயம்: 'நவீன விஞ்ஞானக் கற்கைகளில் காலத்தின் தேவை'

வழங்குபவர்: இளம் விஞ்ஞானி கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன்

(B.Sc (Hons), M.Sc, Dic, Ph.D (London)

(சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதீகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நிறைவுரை

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி.

# மரண அறிவித்தல்

## *திருமதி மேரிகிளாறா பிரான்சீஸ்*



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிகிளாறா பிரான்சீஸ் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்திரேஸ்பிள்ளை - கிறிஸ்ரினம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பிரான்சீஸ் (ஓய்வுபெற்ற அதிபர்)ரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஸ்கொலஸ்ரிக்கா, அந்தோனிப்பிள்ளை, அருட்சகோதரி பேபியன் (திருக்குடும்ப கன்னியர் மடம், பாசையூர்), ஜோண் ஜோச் (கொழும்பு), பிரான்சீஸ், சேவியர் (U.K), காலஞ்சென்ற ஜோண் பப்ரிஸ்ற், ஸ்ரெலா றெஜீனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேவியர், அருமைநாயகம் (பண்டத்தரிப்பு, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), யோசவ் செல்வநாயகம் (புறூணை), திரேசா, சுகிர்தசீலி, ஜீவரட்ணம் (OLR ஆசிரியர்), மேரி விக்ரோறியா, ஜெயராஜா (கொழும்பு), போசியா மரியநாயகம் (வவுனியா ஆசிரியை), ஆன் கிறேஸ் தரளம், யோசவ், செபஸ்ரியன்ராஜ நாயகம் (சுவிஸ்), ஜீவநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரி பேணடேற், வசந்தமாலா, ஜீவரட்ணம், ஜெயராஜா, யோசவ் (நியூ சிற்றி றேடர்ஸ்), கிறிஸ்ரின், சுவேந்தினி, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2009) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் இறம்பைக்குளம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சப்பலஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*


# தேவை

I) மில்வேலை, II) மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு, III) ரயர் வேக்ஸ் - என்பவற்றில் அனுபவம் உள்ளவர்களும், பயிலுநர்களும் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ், No. 18, றக்கா றோட், யாழ்ப்பாணம்.

Tele.No. 021 222 9201

# கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படும்

பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
★ P.ரவி - சாவகச்சேரி.
★ கோல்டன் பாம் - பருத்தித்துறை.
★ மதுரா - யாழ்ப்பாணம்
★ [illegible]


# மரண அறிவித்தல்

## *திருமதி V.R.கதிரேசு அன்னபூரணி*



(நயினாதீவு மலையின் ஐயனார் ஆலய பரம்பரை உறுப்பினர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.V.R.கதிரேசு அன்னபூரணி நேற்று (17.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற V.R.கதிரேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதன்- பெரியநாச்சியார் தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தின சபாபதி (JP, விவாகப் பதிவாளர், யாழ்ப்பாணம்), சாரதாதேவி (கொழும்பு), சறோஜினிதேவி (பிரான்ஸ்), சிவஞானசுந்தரம் (மேல் மாகாண கல்விவள ஆலோசகர், கொழும்பு), அருளானந்தசிவம் (கொழும்பு), மலராஜினி (போதனாசிரியர், தொழில்நுட்பக்கல்லூரி, மருதானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகவடிவு, மகாலிங்கசிவம் (JP), அமரர் கனகநாயகம் மற்றும் சிறிலதா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுசீலா (கனடா), குலேந்திரகுமார் (கல்வித் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைசாமி, நாகேசு, மங்கையர்க்கரசி மற்றும் சடையப்பசாமி (கனடா), பூமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும் ஓம்சக்தி , ஆதித்தன், ஆதிசக்தி, சிவசக்தி, மணிகண்டன், ஞானசக்தி, சாந்தி, சுகிர்தரன் காலஞ்சென்ற சர்மிளா மற்றும் நாகதர்சினி, முரளி, சுகந்தன், சுதாகரன் , பகிராஜ், பிரமிளா, ஜனகன் , அபிமன், ஜசோதன், சுதாகரன் , சண்முகநாதன், சர்மிளா, குபோஜினி, அனுமா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் நிலாந்தி, பூர்ணிமா, அமிர் தவர்ஷன், கிங்ஸ்லி, அமில், சரண் திவ்வியா, றியா ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.02.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*363/1,நாவலர் ஒழுங்கை,*
*நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி.*

தகவல்:
V.R.K.இரத்தினசபாபதி (JP)
விவாகப் பதிவாளர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்திய அரசின் போக்கில் தளர்வு

ஈழத் தமிழர் விவகாரத்தில் எழுந்துள்ள சர்ச்சையில் புதுடில்லி அரசு குழம்பிப் போயிருப்பது தெளிவாக - அப்பட்டமாக - தோற்றுகின்றது.

ஒருபுறம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்ட காங்கிரஸ் தலைமைப் பீடம். மறுபுறம் இலங்கையில் நடைபெறும் கொடூர யுத்தத்தில் அப்பாவித் தமிழர்கள் தினசரி பல டசின் கணக்கில் கொல்லப்பட்டும், நூற்றுக் கணக்கில் கை,கால்களை இழந்து, அவயவங்களைப் பறிகொடுத்து படுகாயமுற்றும் தொடரும் பேரவல நிலைமையைக் கண்டு கொதித்தெழுந்து நிற்கும் தமிழகமும் ஏனைய தரப்புகளும்.

இலங்கையில் விரைவில் இடம்பெறப்போகும் புலிகளின் நிரந்தர அழிவுடன் எல்லா விடயங்களும் அமுங்கி - அடங்கி - போய்விடும் என உறுதியாக எதிர்பார்த்த காங்கிரஸ் மேலிடத்துக்கு நிலைமை இழுபட்டுச் செல்வதும், அதனால் தென்னிந்திய கருத்து நிலைப்பாடு பெருமளவில் மாறி வருவதும் பெரும் சிக்கலாகத் தோற்றத் தொடங்கியிருக்கின்றன.

இந்திய அரசியலில் இதுவரை காலமும் இடதுசாரிக் கட்சிகள் பலவும், இந்துத்துவ மதவாதக் கட்சியான பாரதீய ஜனதாவுக்கு எதிரணியிலேயே தம்மை நிலைநிறுத்தி வந்துள்ளன. மதவாதத்துக்கு எதிரான உறுதியான நிலைப்பாடு என்ற காரணத்தை முன்னிறுத்தி பாரதீய ஜனதாவிலிருந்து எப்போதுமே அவை தள்ளி நின்றே வந்துள்ளன. இந்தப் போக்கு இந்தியாவின் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான அரசியல் சூழ்நிலையை தந்தும் வந்திருந்தது.

காங்கிரஸுக்கு எதிர்த்தரப்பில் இருக்கின்றவையான பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இடதுசாரிகளுக்கும் இடையில் எச்சமயத்திலும் உறவு நிலை இல்லை என்பது காங்கிரஸுக்கு சாதகமான அம்சம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அந்த வழமையான அரசியல் போக்கில் அதிரடி சறுக்கலை இலங்கையில் ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை விவகாரம் உருவாக்கி விடலாம் என்ற புதிய சூழ்நிலை இப்போது கட்டவிழ்கின்றது.

இலங்கையில் மஹிந்த அரசு முன்னெடுக்கும் தற்போதைய தீவிர யுத்தப் போக்கை இன அழிப்பு நடவடிக்கை என்றே இந்திய இடதுசாரிக் கட்சிகள் பெரும்பாலும் அடையாளம் கண்டு தீர்மானித்திருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் மதவாதத்துக்கு எதிரான நிலைப்பாடா, இனவழிப்புச் செயற்பாட்டுக்கு எதிரான போக்கா என்ற இரண்டு விடயங்கள் முன்வைக்கப்படுமானால், மதவாதப் பிரச்சினையை விட இனவழிப்பு விடயத்தை முக்கிய - அவசர - அவசியமாகக் கவனிக் கப்பட வேண்டிய - அம்சமாகக் கருதவேண்டும் என்ற முடிவுக்கு இடதுசாரிகள் இப்போது வந்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

ஆகவே, எதிர்காலத்தில் - மதவாதப் போக்குடைய பாரதீய ஜனதாக் கட்சியா அல்லது இலங்கையில் இனவழிப்புக்கு ஒத்து ஊதி, ஒத்துழைக்கும் காங்கிரஸ் கட்சியா என்ற விவாதம் முன்வைக்கப்பட்டு தீர்மானம் எடுக்கும் கட்டாயம் நேர்ந்தால் இனவழிப்புக்கு உடந்தையாகும் காங்கிரஸைப் புறந்தள்ளி, மதவாதப் போக்குடைய பாரதீய ஜனதாக் கட்சியின் கையைப் பற்றுவதற்கும் இடதுசாரிகள் தயங்கமாட்டார்கள் என்ற செய்தி காங்கிரஸ் தலைமைக்கு இப்போது தெளிவாக உணர்த்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே ஈழத் தமிழருக்கு ஆதரவாகப் புதுடில்லியில்அண்மையில் இடம்பெற்ற பல பகிரங்க நிகழ்வுகளின் மேடைகளில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களும் இடதுசாரிகளும் ஒன்றாகத் தோன்றும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அரசியல் பின்புலங்களின் நடுவிலேயே, இந்திய மத்திய அரசின் கொள்கை நிலைப்பாட்டை விளக்கி இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல் இந்திய நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் இலங்கைவிடயத்தை ஒட்டி சற்று மசிந்து கொடுக்கும் புதிய போக்கை இந்திய அரசு வெளிப்படுத்தியிருக்கின்றது எனத் தெரிகின்றது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியிலிருந்து பல்வேறு இந்தியத் தலைவர்கள் வற்புறுத்திய பின்னரும் - சுமார் இரண்டு மாத இழுபறிக்குப் பின்பு - இலங்கைக்கு ஆக மூன்று மணிநேர விஜயத்தை மட்டுமே மேற்கொண்டு அண்மையில் கொழும்புக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு 'யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும்' என்ற வார்த்தையைத் தப்பித் தவறிக்கூடப் பயன்படுத்தாமல்; கொழும்பு அரசுக்கு ஆதரவான போக்கை உறுதியாக வெளிப்படுத்தி விட்டுப் போனார்.

அதேசமயம், புலிகள் உட்பட எல்லாத் தரப்பினருடனும் பேசித் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அப்போது அவர் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் இப்போது இந்திய மத்திய அரசின் நிலைப்பாடாக அந்த நாட்டின் ஜனாதிபதி முன்மொழிந்த கொள்கை விளக்கப் பிரகடனத்தில் சற்றுத் தளர்வுப் போக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

* இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.
* ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கான விருப்பத்தைப் புலிகள் வெளியிடும் அதேசமயம், இலங்கை அரசு தனது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். (இதில், ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கான விருப்பத்தைப் புலிகள் வெளியிட வேண்டும் என்றுதான் கோரப்பட்டுள்ளதே தவிர, ஆயுதங்களைப் புலிகள் உடனே கீழே வைக்கவேண்டும் என்று கோரப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.)
* புலிகளும், இலங்கை அரசும் பேச்சு மூலம் தீர்வு காணவேண்டும். (ஏனைய கட்சிகள், தரப்புகளுடன் பேச வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படவில்லை)

- இவ்வாறு இந்திய அரசினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் ஈழத் தமிழர் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவையா என்பது வேறு விடயம்.

ஆனால், ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசுக்கு ஒரேயடியாகத் தான் காட்டிவந்த உறுதியான ஆதரவுப் பிடியிலிருந்து இந்திய மத்திய அரசு சற்றுக் கீழிறங்கி, ஈழத் தமிழர் ஆதரவுப் பக்கம் சற்றேனும் சாயும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது என்பது தெளிவு. இவ்விடயத்தில் இந்திய நாட்டுக்குள் கிளர்ந்தெழுந்துள்ள ஈழத் தமிழர் ஆதரவு மக்கள் எழுச்சியே இதற்குப் பிரதான காரணமாகும்.

# கோப்பாய் இடைத்தங்கல் முகாமில் வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது

## கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.18

வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து கோப்பாய் இடைத் தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடையே வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் வைத்திய அதிகாரி டாக்டர் கே.நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கோப்பாய் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களிடையே காய்ச்சல் பரவுவதாக எமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்கோப்பாய் பிரதேச சுகாதாரப் பணிமனை வைத்தியர்கள், ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்கள் அங்கு மருத்துவப் பரிசோதனை செய்தபோது 'வைரஸ்' காய்ச்சல் பரவியுள்ளமை பரிசோதனை அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, தினமும் அங்கு சென்று மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குப் கோப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனை வைத்தியர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் அங்கு தங்கியுள்ளவர்களுக்கான சுகாதார வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு சுமார் 20 முதல் 25 பேர் வரை வைரஸ் காய்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது - என்றார். (50-9-51)

# குடாநாட்டுக்குப் போதியளவு சிமெந்து; அதன் விற்பனை விலையும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.18

குடாநாட்டுக்குப் போதியளவு சிமெந்து எடுத்துவரப்பட்டதை அடுத்து அதன் விற்பனை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதன் காரணமாக ஒரு சில தனியார் விற்பனை நிலையங்களில் சிமெந்து விற்பனை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு பைக்கற் சிமெந்து ஆயிரத்தி 600 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டாலும் தனியார் வர்த்தக நிலையங்களில் மொத்தமாகச் சிமெந்து பெறுவோருக்கு ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் ஆயிரத்து 575 ரூபாவரை விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சிமெந்து பைக்கற்றுகளின் விற்பனை திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுவதால் வர்த்தகர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை - சிமெந்து பெறக் கூடியதாக இருக்கின்றபோதிலும் கட்டட வேலைகளுக்குத் தேவையான மண்ணைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203-224)

# குடாநாட்டில் தீவிரமாக பரவும் சின்னமுத்து நோய்

யாழ்ப்பாணம்,பெப்.18

குடாநாட்டில் சின்னமுத்து நோய் தீவிரமாகப் பரவிவருவதாகப் பிரதேச வைத்தியசாலைகளின் தகவல்களிலிருந்து தெரியவருகின்றது.

இது தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வைத்திய அதிகாரி கே.நந்தகுமாரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் சின்னமுத்து நோய் தீவிரமாகப் பரவுகின்றது.

சகல பிரதேச வைத்தியசாலைகளின் தகவல்களும், பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களின் தகவல்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

இதற்கென கொழும்பிலிருந்து மருந்து வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்நோய் தீவிரமாகப் பரவுவதைத் தடுக்கும் முகமாகப் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக கிராம ரீதியாக பல்வேறு விதமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை - வன்னியில் இருந்து வருகைதந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள மிருசுவில் நலன்புரி நிலையங்களிலும் சின்னமுத்து நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன - என்றார். (50-9)

# சுன்னாகம் மின்சார நிலையத்துக்குப் புதிய தொலைபேசி இலக்கங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.18

சுன்னாகம் மின்சார நிலையத்திற்குப் புதிய தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மின்பாவனையாளர் சேவைக்கு 021 224 0301 என்ற தொலைபேசி இலக்கமும் மின்பொறியியலாளர் சேவைக்கு 021 224 0302 என்ற தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட்டுள்ளன. (202)

# விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன

## இந்த மாதத்திற்குள் திறந்துவைக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கென திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தின் நிர்மானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

திருநெல்வேலி விவசாயத் திணைக்களக் கட்டடத்திற்கு அருகாமையில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை இந்த மாதத்திற்குள் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பதற்கு விதை உற்பத்திக் கூட்டுற வுச் சங்கம் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் விதையினங்கள் கூடுதலாகக் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-224)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கோப்பாய்,பெப்.18

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'நீர்ப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட மேசன் பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் உபகரணப் பொதி வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இணைந்து 26 பேர் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ளனர். இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார். (203-72)

# குடாநாட்டில் நான்கு நீதிமன்றங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

## நீதிச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.18

மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் குறைந்த வசதிகளுடன் தனியார் கட்டடங்களில் செயற்பட்டு வரும் நீதிமன்றங்களை அனைத்து வசதிகளுடனும் முறையாகச் செயற்பட வைப்பதற்கான முயற்சிகளில் நீதிச் சேவை ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

மோசமான நிலையில் இருந்த யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் புனர்நிர்மானம் செய்யப்பட்டு புதிய கட்டடங்களில் அதன் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

குடாநாட்டில் போரின் காரணமாகச் சீரழிந்து கிடக்கும் நீதிமன்றக் கட்டடங்களை மறுசீரமைப்புச் செய்து, புதுமெருகுடன் செயற்படச் செய்வதற்காக 30 பேர் கொண்ட புதிய குழுவொன்று செயற்படவிருக்கின்றது. குடாநாட்டில் தற்பொழுது பணியில் இருக்கும் நீதிவான்கள்,ஓய்வுபெற்ற நீதிவான்கள் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் இக்குழுவில் இடம்பெற்றிருப்பார்கள் என்று நீதிபதி விக்னராஜா தெரிவித்தார். (ப)

# உள்ளூர் உ.கிழங்கின் அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.18

குடாநாட்டில் பயிரிடப்பட்ட உள்ளூர் உருளைக்கிழங்கின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

விவசாயிகளால் தற்போதைய போகத்திற்கு முன்னர் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கே இவ்வாறு அறுவடை செய்யப்பட்டு வருவதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அறுவடை செய்யப்படும் இந்த உள்ளூர் உருளைக்கிழங்கு சந்தைகளில் விற்பனைக்கு வந்துள்ளது.

இவை சந்தைகளில் கிலோ 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதேசமயம் கடந்த மாத நடுப்பகுதியில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்குப் பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

தற்போதைய குளிர்காலம் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற காலம் என்பது குறிப்பிடத்தக்கது. (203-224)

# கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.றோட்டறிக் கழகம் கடந்த வருடம் நடத்திய பொது அறிவு, நுண்ணறிவு தேடல் - 11 போட்டியில் பரிசு, மற்றும் சான்றிதழ் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி கழக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் றோட்டறிக்கழக தாய்க்கழக அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## நாளை

| | |
|---|---|
| மாசி 07 | 19.02.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ. 11.17 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | காலை 08.55 |
| சுபநேரம்: | 08.02 - 09.32 |
| ராகுகாலம்: | 02.02 - 03.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளராகக் கடந்த 13 வருடங்களாகச் சேவையாற்றி 18.02.2009ஆம் திகதி முதல் தே.இ.சே மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

உயர்திரு தி.சிவதட்சணாமூர்த்தி

அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து மேலும் சிறப்பாகப் பணியாற்றப் பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

கலைநகர், சித்தன்கேணி.

நிர்வாக சபையினர், கலைநகர் இளைஞர் கழகம்.

(சி/557176)

# கண்ணீர் அஞ்சலி



எமது தந்தையின் பாசமிகு சகோதரி

திருமதி

## குமாரசாமிகேதீஸ்வரி

அவர்கள் கனடாவில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது அத்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சட்டநாதர் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மருமக்கள்: ச.பிறேமதாசன், பெ.சுதாகரன், பெ.விசாகரன்.

# ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

## வாக்காளர் இடாப்பு முடுதல்

31.01.2009 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டு உள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர் ஆட்சேபனைகளைப் பெறுவதற்காக 18.02.2009 -05.03.2009 வரை கிளைகளில் தொங்க விடப்பட்டுள்ளது.

மேலும் கிளை.3, கிளை.13 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை.4 இலும்
கிளை.5 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமை அலுவலகத்திலும்
கிளை.11 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை.10 லும்
கிளை.12 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை.6லும்

தொங்கவிடப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 05.03.2009இற்கு முன் எழுத்து மூலம் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பைப் பூர்த்திசெய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

(சி/557175)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## பொன்னையா கதிரவேலு



அன்னையின் மடியில் 19.05.1933

ஆண்டவன் அடியில் 19.01.2009

ஆளுமை கற்றம், உறவு, வரென்று நின்ட வாழ்வில் தடம் பதித்து
வாழ்வில் சுமை கலக்கச் சுமை லக்கச் சுகமாகச் சுமந்தீர்
கனவுகளும் காத்திருப்புகளும் உம் நெஞ்சம் நிறைந்திருக்கக் காத்திருந்தீர்
வாழ்வில் இடை வழியில் உறவுகளை தவிக்கவிட்டு எங்கள்றீர்
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

19.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிரியைகள் (இன்று) 18.02.2009 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றி தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் நன்றிகள் பல.

கோட்டைக்காடு, மல்லாகம். (82800) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி நிர்மலா விக்னேஸ்வரன் B.Sc(Teacher)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நிர்மலா விக்னேஸ்வரன் 14.02.2009 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த தம்பிராசா விக்னேஸ்வரனின் M.Sc (Teacher, Queens' College,London) அன்பு மனைவியும், சங்கானையைப் பிறப்பிடமாகவும், லண்டனில் வசிப்பவருமான Dr.கனகசிங்கம்- சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்ற தம்பிராசா- நல்லம்மா தம்பதிகளின் மருமகளும் கணேஸ், சிவானி ஆகியோரின் தாயாரும், பவானி இந்திரகுமார், சாந்தா, சிவகுமார், சுகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேசோமயானந்தசிவம், சோமசுந்தரம்(கண்டி) திருமதி நகுலேஸ்வரி பரமசிவம், தபேந்திரன் (நோர்வே), மகேசன் (U.K.) ஆகியோரது மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2009) வியாழக்கிழமை மு.ப 11மணி(லண்டன் நேரம்)யளவில் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'பணிக்கர் வளவு, திருநெல்வேலி.

தகவல்:ந.பரமசிவம் (சகலன்), அதிபர், யா/யாழ்ரன் கல்லூரி,

# சரசாலை வடக்கில் கட்டடத் திறப்பு விழா

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சரசாலை வடக்கில் நிர்மானிக்கப்பட்ட கிளைக் கட்டடம் (இல.13) நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.சிவலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தினை திறந்து வைப்பார். (1-207)

# வீட்டுப் பணிப்பெண் தேவை

நெல்லியடியில் வசிக்கும் உத்தியோகம் பார்க்கும் ஒரு குடும்பத்தினருடன் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை. கிழமைக்கு ஒரு தடவை வீடு செல்ல அனுமதிக்கப்படுவார். உயர்ந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: திரு.V. நதன்
060 221 0806, 077 500 3376
திரு .V. ரமணன்
0773 26 9454

# ஒத்துமாறல்

கொழும்பு மாவட்டத்தில் கடமையாற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் III ஐச் சேர்ந்தவர் யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.இல. 077 6026 729

# றோட்டறிக் கழகத்தின் நடன நிகழ்வு

## பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 22 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருந்த 'நடன சங்கமம் 2009' நிகழ்வு தவிர்க்க முடியாத சமகால சூழ்நிலை காரணமாகப் பிறிதொரு தினத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்வு நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ்.றோட்டறிக் கழகம்

PANDA express
UNIVERSAL COURIER
சர்வதேச தபால் பொதிகள் கூரியர்சேவை
உலகின் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகள் அனுப்புவதற்கு
CD & DVD அனுப்பிவைக்கப்படும்
யாழ்நகரிலிருந்து இலங்கையின் எப்பாகத்திற்கும் பொதிகள் ஆவணங்கள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் மிககுறைந்த கட்டணத்தில் அனுப்பிவைக்கப்படும்.
நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்
No 167,Kasthuriyar Road, Jaffna. Phone: 0212228250

# சனசமூக நிலையங்களுக்கு நூல்கள் கையளிப்பு இன்று

யாழ்ப்பாணம்,பெப்.18

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் குடாநாட்டு சனசமூக நிலையங்களுக்கு நூல்கள் வழங்கப்படும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 07.30 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நூல்களைப் பெற்றுக் கொள்ளும் முகமாக அண்மையில் யாழ். அமைச்சு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட சனசமூக நிலையங்களுக்கே முதல் கட்டமாக நூல்கள் வழங்கப்படவுள்ளன.

என்வே யாழ். அமைச்சு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் இன்று காலை 07.30 மணிக்கு அமைச்சின் யாழ். அலுவலகத்திற்கு வருகை தந்து தங்களுக்குரிய நூல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு கேட்டுள்ளது. (1)

# வெள்ளிவிழாக் காணும் கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம்

வெள்ளிவிழாக் கொண்டாடும் கல்வாரி பூரண சுவிஷேச தேவாலய மக்களாகிய எங்களுக்கு கடந்த காலமெல்லாம் கர்த்தர் உண்மையுள்ளவராய் இருந்து செய்த நன்மைகளுக்கு கர்த்தருக்கே துதி,கன, மகிமை செலுத்துகிறோம்.

(எம் வன்னி மக்கள் நிலை கருதி எல்லாவித நிகழ்வுகளையும் இரத்துச் செய்துள்ளோம்)

இல.89, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

கல்வாரி குடும்பம்.

குறிப்பு- இன்று(18.02.2009) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நன்றி, துதி, ஆராதனை நடைபெறும். அனைத்து விசுவாசிகள், அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(82805)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா அப்புத்துரை

(தர்மகர்த்தா - வண்ணார்பண்ணை ஐயனார் கோயில்)

யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா அப்புத்துரை நேற்று (17.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: அ.சரவணபவானந்தன் (மகன்).

(சி/557178)

## மார்க்கண்டு சொர்ணம்மா



உரும்பிராய் மேற்கு, அன்னுங்கையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சொர்ணம்மா (14.02.2009) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரிகந்தன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் கணேசரத்தினம், கமலராணி, விமலராணி, யோகராணி, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு தாயும், பரசுராமன் (கட்டட ஒப்பந்தகாரர்), மகாலிங்கம், மார்க்கண்டு, நவரத்தினம், புஸ்பலீலா, பவானி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(18.02.2009) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னுங்கை, உரும்பிராய்மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்.

## வேலர் மார்க்கண்டு



அம்பலவாணர் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலர் மார்க்கண்டு அவர்கள் கடந்த (14.02.2009) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னத்துரை,சிங்காரம் மற்றும் நடேசுவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் கமலாதேவி, பன்னீர் செல்வம், காலஞ்சென்ற புஷ்பராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அருணோதயராசா மற்றும் தவராணி, இந்திராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை (18.02.2009) மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி, உடுவில்.

தகவல்: குடும்பத்தினர் (பன்னீர் செல்வம்)

(82809)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 25 ★ 08 ★ 1947

விண்ணுலகில் 29 ★ 02 ★ 2008



அமரர் நடராசா

## தங்கராசா

(சட்டத்தரணி)

திதி: 18.02.2009

எங்கள் குடும்ப குலவிளக்கே
அன்பின் இருப்பிடமே
அறிவின் பொக்கிசமே
பார்போற்றும் நல் உத்தமனே
எங்களை கண்ணை இமை
காப்பதுபோல் காத்தவரே
உங்களை கொடிய நோய்
காவு கொண்டதுவோ
எங்களை ஆதரிப்பதற்கு
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும்
அரவணைப்பிற்கும் ஈடாகுமா
ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாரையடி, [illegible] தெற்கு, [illegible]

(சி/557187)

என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரின் அனுசரணையுடன் நல்லூர் ஜே/109 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப் பட்ட மனை முகாமைத் தகவல் பயிற்சி ஆரம்ப நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் க.இரவீந்திர சர்மா, பாலசு திர்காம தர்ம கர்த்தா சிவஸ்ரீ கு.குமாரக் குருக்கள் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும்படங்களில் காணலராம்.
(படங்கள்:லக்ஸ்மன்)

## அடுத்த பெரும் போகத்துக்கான
# உள்ளூர் மரக்கறி விதையினங்கள் உற்பத்தி மும்முரமாக நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம்,பெப்.18

அடுத்தபோகத்திற்கான உள்ளூர் மரக்கறி விதையினங்களை உற்பத்தி செய்யும் பணி தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

பெரும்பாலும் இந்த மரக்கறி விதைகளை ஏப்ரல் அல்லது மே மாதத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க கூடியதாக இருக்கும் என விதை உற்பத்திக் கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் த.சிவலோகநாதன் தெரிவித்தார்.

திருநெல்வேலியிலுள்ள விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது கத்தரி, பாகல், புடோல், மிளகாய், பயிற்றை, பூசணி போன்ற மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இவை எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை- குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் இந்த உள்ளூர் மரக்கறி விதைகளுக்குப் பெரும் கிராக்கியும் தட்டுப்பாடும் நிலவி வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்திற்குப் பின்னர் உள்ளூர் மரக்கறி விதைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இதனால் மரக்கறிச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் சிரமப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (202-224)

# கடும் வெப்பம், பனிக் குளிரினால் வெப்ப நோய்கள் பரவுகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.18

தற்போதைய கடும் வெப்பம் மற்றும் இரவில் பனி, குளிர் போன்றவற்றால் பொது மக்கள் பலர் வெப்ப நோய்களுக்கு இலக்காவதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வெப்ப நோய்களுக்கு இலக்காகிச் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் மேற்படி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் திடீரென அதிகரித்துக் காணப்படுகிறது

காய்ச்சல், தடிமல், சளி, தலையிடி, இருமல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுவோரே அதிகரித்துக் காணப்படுகிறது. (202-224)

# விசேட தேவையுடைய ஏழைகளுக்கு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை

கோப்பாய்,பெப்.18

குடாநாட்டில் வதியும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விசேட தேவையுடையோருக்கு வேண்டிய உபகரணங்கள் பிரதேச செயலகங்களின் சமூக சேவைப் பிரிவினால் வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி, சக்கரநாற்காலி, செயற்கைக்கால், காது கேட்கும் கருவி, ஊன்றுகோல், வெள்ளைப்பிரம்பு ஆகியவையே வழங்கப்படவுள்ளன.

அரச மருத்துவமனையில் பெற்றுக் கொண்ட மருத்துவச் சான்றிதழைக் குறித்த விண்ணப்பத்துடன் இணைத்து பிரதேச செயலகங்களூடாக விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய விசேட தேவையுடைய மாணவர்கள் இதனைப் பெறுவதன் மூலம் தமது கல்விச் செயற்பட்டை இலகுபடுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-72)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம்,பெப்.18

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகள், சந்தை வியாபாரம் ஆகியவற்றில் பயன்படுத்தும் நிறுவை, அளவை நிறுக்கும் கருவிகள் ஆகியவற்றுக்கு முத்திரையிடும் பணிகள் நாளை வியாழக் கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பலநோக்கக் கூட்டுறவு சங்க தலைமை அலுவலகத்தில் 19 ஆம் 20 ஆம், 24 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவை களும் திணைக்களப் பரிசோதகர் முன்னிலையில் முத்திரையிடப்படுமென நகரசபைச் செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தெரிவித்தார். (202-207)

# வாழைப்பழங்களைக் கொள்வனவு செய்ய நுகர்வோர் பின்னடிப்பதாக வியாபாரிகள் கவலை

நல்லூர்,பெப்.13

பொதுமக்கள் தற்போது வாழைப்பழங்களைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வருகின்றனர். இதனால் வாழைப்பழங்களை விற்பனை செய்ய முடியாமல் இருப்பதாகவும் வியாபாரிகள் சிலர் கூறுகின்றார்கள்.

விலை அதிகரிப்பின் காரணமாகவே நுகர்வோர் வாழைப்பழத்தைக் கொள்வனவு செய்வதைக் குறைத்துக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. தற்சமயம் கதலி வாழைப் பழம் கிலோ 150 ரூபா முதல் 160 ரூபா வரையும் இதரை கிலோ 120 ரூபா முதல் 130 ரூபாவரையும் விற்பனை செய்யப் படுகின்றன.

நிஷா அனர்த்தம் காரணமாகப் பெரும்பாலன வாழைகள் அழிந்து விட்டன. இருந்தபோதும் சந்தைகளில் வாழைக் குலைகளைத் தாராளமாகக் காணக் கூடியதாக உள்ளது.

அதிகரித்த விலை காரணமாகவே மக்கள் வாழைப்பழங்களைக் கொள்வனவு செய்வதைக் குறைத்துள்ளனர் என வியாபாரிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் பிஞ்சுக் குலைகளுக்கும் மருந்து தெளித்து பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுவதே கொள்வனவு செய்ய விரும்பாமைக்குக் காரணமாகும். பழங்களை வாங்கிச் சாப்பிடும்போது மருந்துகளின் வாசனைகளையும் உணரமுடிகிறது எனவும் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (202-111)

# தென்மராட்சி மாணவர் கணிதபாடக் கையேடு

யாழ்ப்பாணம்,பெப்.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கான கணிதபாட சுய கற்றல் கையேடு வழங்கும்நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். (202-207)

# நாட்டில் அமைதி வேண்டி சமய வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட தென்மராடசிப் பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களால் தைப்பூச தினத்தன்று ஆலயங்களில் சமய வழிபாடுகளும், பூசைகளும் நடத்தப்பட்டன.

# தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோரின் விவரம் திரட்டு

யாழ்ப்பாணம்,பெப்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினரும், தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சும் இணைந்து இப்பணிகளை மேற்கொள்ளவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களின் விவரங்களைத் திரட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்ட கிராம மட்டப் பிரதிநிதிகளுக்கு இரு நாள் பயிற்சி வகுப்புகள் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டுள்ளது. (202-207)

# கைதடி-மட்டுவில் இணைப்பு வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.18

கைதடி-மட்டுவில் இணைப்பு வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது. இதனால் இப் பகுதி விவசாயிகளும் பொது மக்களும் பல மைல் தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டுவில் சந்திரபுரம்-கைதடி நவபுரம் இணைப்பு வீதியாகப் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

வலிகாமம் பகுதி விவசாயிகள் நீர்வேலி-கைதடி-மட்டுவில் ஆகிய இணைப்பு வீதிகள் ஊடாகத் தென்மராட்சிப் பகுதிகளுக்குப் போக்குவரத்து செய்து வந்தனர்.

மழை வெள்ளங்களினால் வீதியின் பெரும்பாலான பகுதிகள் அள்ளுண்டு குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ் வீதியினைப் புனரமைத்து வழங்குமாறு உரிய தரப்புக்களிடம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது பிரதம குருக்களினால் கும்பம் எடுத்துச் செல்லப்படுவதையும் கோபுர முடிக்கு கும்ப நீர் ஊற்றப்படுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். சிவாச்சாரியாரினால் கல்விப் பணிப்பாளர், அதிபர் ஆகியோருக்கு பிரசாதம் வழங்கப்படுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.
(படங்கள்:நவாலி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ். மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.





## 3ஏ எடுத்த இரட்டையர்

### நிருஜா குமாரசுவாமி (வட இந்து மகளிர் கல்லூரி) நிருபா குமாரசுவாமி

எங்களுடைய அப்பா யாழ்.நீர்வள சபையின் பிராந்தியக் காரியாலயத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர். எமது ூத்த சகோதரி யாழ்.பல்கலைக் கழக சமூகவியல்துறை சிறப்புக் கலை இறுதி வருட மாணவி. இரண்டாவது சகோதரி 2007ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரட்சையில் 3ஏ பெறுபேறு டுத்து யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட மாணவியாக உள்ளார். நாங்கள் இருவரும் இரட்டைச் சகோதரிகள். எமது சொந்த இடம் மாசேரி, வரணி. எம்முடைய ஆரம்பக் கல்வியை வரணி அ.த.க.பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 3 வரை கல்வி பயின்று அதன் பின்னர் எமது கல்வி முன்னேற்றத்திற்காக எமது பெற்றோர் பருத்தித்துறைக்கு வந்து வட இந்து மகளிர் கல்லூரியில் எமது கல்வியைத் தொடர வழிவகுத்தனர்.

கலைத்துறையில் எமக்கு மிகுந்த ஈடுபாடு இருந்ததால் தமிழ், புவியியல், சங்கீதம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தோம். இப்பாடத் தெரிவுக்குப் பெற்றோர்களும் சகோதரிகளும் ஆலோசனை வழங்கினர். இதன் மூலம் 3ஏ பெறுபேற்றைப் பெற்றோம். [நிருஜா மாவட்ட நிலையில் 12ஆம் இடத்தையும், நிருபா 28ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்]. கல்வி கற்கும் போது இருவரும் சேர்ந்து இரவு பகலாக கற்றோம். பெற்றோர்கள் எதுவித குறையுமின்றி சகல வசதிகளையும் செய்து தந்து எமது கல்வியின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தனர்.

நாம் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கு எங்கள் குலதெய்வம் கும்பிட்டான்புலம் கற்பக விநாயகப் பெருமானின் ஆசியும், பெற்றோர்களின் வழிநடத்தலும் சகோதரிகளின் ஒத்துழைப்பும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் கற்பித்தல் திறமையும் தனியார் கல்வி நிறுவனங்களின் ஊக்குவிப்பும் எமது விடாமுயற்சியும் உறுதுணையாக அமைந்தது.

எமது கல்வி முன்னேற்றத்துக்கு உதவிய எமது அப்பா, அம்மாவுக்கும் எமது சகோதரிகளுக்கும், நண்பர்களுக்கும் ஆரம்பம் முதல் இறுதிவரை எமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நானும் எனது சகோதரிகளும் இப்பாடசாலையில் கல்வி கற்றுப் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வேண்டும் என்ற அப்பா அம்மாவின் குறிக்கோள் நிறைவேற்றியதில் எமக்கும் எமது பெற்றோருக்கும் மகிழ்ச்சியாக உள்ளது. நாம் பல்கலைக்கழகம் செல்வதற்கு எமக்கு கல்வியைக் கற்பித்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தொடக்கம் எமக்குக் கற்பித்த சகல ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



### யதுசேரா செல்வராஜா
பெறுபேறு: 3ஏ (யாழ்ப்பாணக் கல்லூரி)

தரம் 1இலிருந்து உயர்தரம் வரை யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே கல்வி கற்றேன். நான் முதலில் விஞ்ஞானத்துறையினைத் தேர்ந்தெடுத்துப் படித்தேன். ஆனால் பின்னர் வணிகத்துறைக்கு மாறிப்படித்தேன். நான் நல்ல பெறுபேற்றினைப் பெற்றமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். எமக்கு எத்துறை பொருத்தமோ அத்துறையே தெரிவு செய்யவேண்டும்.

உயர்கல்வியுடன் தொழில்சார் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் AAT படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பாடசாலை அதிபர் றோயல் விமலேந்திரனுக்கும் கருணைதாஸ் ஆசிரியருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனியே வகுப்பறைக் கல்வியுடன் நில்லாமல் பாடசாலையில் இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் ஆர்வத்துடன் பங்குபற்றுவேன். பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் ஆங்கிலதினப் போட்டியில் கோட்டம், வலயம், மாவட்ட ரீதியில் பரிசுகள் பெற்றுள்ளேன். சிறுதோழர், சாரணியம் என்பவற்றிலும் இருந்துள்ளேன். மாணவத் தலைவியாகவும் இருந்துள்ளேன்.

நான் சிறப்பான பெறுபேற்றினை பெறுவதற்கு ஊக்கமளித்த பெற்றோர், சகோதரர்கள், அம்மாவின் உடன் பிறப்புக்கள் எல்லாருக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். மேலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனக்குச் சிறப்பான வழிகாட்டல்களை வழங்கினார்கள். சுப்றா கல்விநிலையம், உயர் கணக்கியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு உற்சாகம் ஊட்டிய எனது நண்பிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் அருள் இருந்தமையால்தான் என்னால் இப்பெறுபேற்றினைப் பெறமுடிந்தது.



### துரைச்சாமி தயாதர்சன்
பெறுபேறு: 3ஏ (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

நான் முதலாம் ஆண்டிலிருந்தே உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் படித்து வந்தேன். முதலாம் ஆண்டிலிருந்து பதினோராம் ஆண்டு வரை என்னை நன்றாக ஊக்குவித்து கல்வி கற்பித்தது என் னுடைய பெற்றோரான துரைச்சாமி- தவமணி ஆகியோர்கள்தான். பாட சாலை அதிபரும், ஆசிரியர்களும் தனியார் கல்வி ஆசிரியர்களும் எனது கல்விக்கு ஊக்கு விப்புத் தந்தனர்.

இதன் பேறாக நான் உயர்தரத்தில் முதல் தடவை 3பி என்ற பெறுபேற்றையே பெற்றேன். இவ்வாறு 3பி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தகுதி இல்லாது இருந்த போதிலும் இரண்டாம் தரமாக உயர்தரத்தைக் கற்கத் தொடங்கினேன். இவ்வாறு இரண்டாம் முறை கற்றுக்கொண்டிருக்கும் போது முதல்தரத்தை என்னுடைய பெற்றோர்களும், தனியார் கல்வி ஆசிரியர்களும் எனது சகோதர, சகோதரிகளும் அதிகமான நம்பிக்கையையும் ஊக்குவிப்பினையும் என் மனதிலே வரவழைத்து உயர்தரப் பாடங்களை மிகவும் சிறப்பாகக் கற்க வழிகாட்டி இருந்தனர். இதன் காரணமாகவே நான் இரண்டாம் முறையாக உயர்தரத்தில் 3ஏ என்ற பெறுபேற்றை எய்த முடிந்தது. எதிர்காலத்தில் நான் ஒரு ஆசிரியராக வர விரும்புகின்றேன்.




### கணேசலிங்கம் தர்மேஸ்வரன்
பெறுபேறு: 2ஏபி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

எனது ஆரம்பக் கல்வியினை மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையிலும் உயர்கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றேன். எனது ஆரம்பக் கல்விக்கு நிறைவான அடித்தளத்தை இட்ட விவேகானந்த வித்தியாசாலைக்கு எனது நன்றிகளை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உயர்தரத்தில் கணிதத் துறையினைத் தேர்ந்தெடுத்தேன். பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் வழிகாட்டல் சிறந்த முறையில் அமைந்ததினால் இத்தகைய பெறுபேற்றை எடுக்க முடிந்தது. அத்துடன், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் சிறந்த முறையில் வழிநடத்தினார்கள்.

விடாமுயற்சியும் எதிலும் சாதிக்க வேண்டும் என்ற உத்வேகமும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பது என்னுடைய சிறிய அனுபவம் கற்றுத்தந்த பாடம்.



### வடிவேலு சண்முகராஜா
பெறுபேறு: 2ஏபி (வட்டு.மத்திய கல்லூரி)

நான் ஆரம்பக் கல்வியினை மிகவும் வசதிகள் குறைந்த பாடசாலையான வட்டு.மேற்கு அ.மி.த.க.பாடசாலையில் கற்றேன். பின் தரம் 6இல் இருந்து இக்கல்லூரியில் கல்வி கற்று வந்தேன். நான் கலைப் பாடத்தினை தேர்ந்தெடுத்தமைக்கு முக்கிய காரணமாய் இருந்தது, இயல்பாகவே சித்திரக்கலையிலும், தமிழின் மீதுள்ள பற்றும்தான் காரணம். உண்பதற்கு உவகையளிக்கும் அமுதமாகத் தமிழ் இருந்தால், புசிப்பதற்கு பூரிப்பூட்டும் கரும்பாக; கலைப் பொக்கிஷமாக சித்திரக் கலை என் மனதளவில் காணப்பட்டது. அடுத்து நாம் வாழும் பூமித்தாயின் இயல்பினை அறிந்து கொள்வதற்குச் சிறந்த களமாக புவியியலைத் தேர்ந்தெடுத்தேன். இம்மூன்று பாடங்களும் நான் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கற்பதற்கு ஏதுவாக அமைந்தன. உண்மையிலேயே சித்திரக் கலையில் ஏ சித்தி பெறுவதென்பது மிகவும் கடினம். 2/3 பகுதி புள்ளிகள் படத்திற்குதான் வழங்கப்படும். படத்திலே கருத்து வெளிப்பாடு, வர்ணப்பிரயோகம், தூரதரிசனம் மற்றும் நாம் கையாளும் பாணி இவற்றிலே மிகுந்த அவதானிப்புடன் வரைதல் வேண்டும். அடுத்து சித்திரக்கலை வரலாற்றுப் பிரிவி லும் குழப்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றை நிவர்த்திசெய்யக் கூடிய வகையில் கற்காது விட்டால் ஏ சித்தியினைப் பெறுவது கடினம்.

இவ் இரண்டிலுமே கூடிய கவனமெடுக்கத்தக்கவர்களாக விளங்கியவர்கள் கல்லூரி ஆசிரியர், கல்லூரி ஆசிரியர் திருமதி. பு.யோகதாசன் மற்றும் ஆசிரியர் து.துசியந்தன் ஆகியோரே என்றால் அது மிகையாகாது.

என் உயர்வுக்கு காரணமாய் இருந்த அதிபர், ஆசிரியர், பெற்றோர், நண்பர்கள் அனைவருக்கும் நான் என்றென்னும் நன்றியுடையவனாய் விளங்குவேன். யாழ்.மாணவர்களின் தேடலும், முயற்சியும் தொடரவேண்டும் என்பதே என் நிரந்தர ஆசை.



### நாராயணன் வினுஷா
பெறுபேறு: 3ஏ (இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம்)

எனது பெற்றோரின் அயராத முயற்சியினால் சிறுவயது முதல் கல்வியில் எனக்கு அதிக ஈடுபாடு இருந்தது. பாடங்களை ஒழுங்காகக் கற்று வீட்டு வேலைகளையெல்லாம் தவறாது செய்வேன். பெற்றோர், சகோதரர்களது ஊக்குவிப்பும் ஒத்துழைப்பும் காரணமாக புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு விடா முயற்சியுடன் கலவியைத் தொடர்ந்ததால் இன்று நல்ல பெறுபேற்றைப் பெற முடிந்தது.

க.பொத. உயர்தரத்தில் கலைப் பிரிவைத் தெரிவு செய்தேன். எனது உறவினர்கள் பலரும் கலைப்பிரிவைத் தேர்ந்தெடுத்துப் பல்கலைக்கழகம் சென்றமையை முன்னுதாரணமாகக் கொண்டு கலைப் பிரிவைத் தேர்ந்தெடுத்தேன். கலைப்பிரிவில் தமிழ், வரலாறு, நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். எல்லாப் பாடங்களுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்துக் கற்றேன்.

படிக்கும் போது ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டு நிவர்த்தித்துக் கொள்வேன். கடந்த கால வினாக்களை அணுகி விடைகளைத் தேடினேன். எனது ஆசிரியர்கள் குறு வினாக்களில் அதிக சிரத்தையெடுத்துக் கற்பித்தமையும் எனது பெறுபேற்றுக்கு உதவியது.

எதிர்காலத்தில் மேலும் கல்வியில் முன்னேறி நல்ல நிலைக்கு வருவதே எனது இலக்காகும். எனது கல்வியையும், அனுபவத்தையும் மக்களுக்காக நாட்டின் நன்மைக்காகப் பயன்படுத்தவே விரும்புகின்றேன். நான் இப் பெறுபேற்றைப்பெற உதவிய பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

சந்திப்பும், படங்களும்: ஒளண்யன், லக்ஸ்மன், சரவணன், கணேசமூர்த்தி, குமரன். 20



### மகேஸ்வரன் கிசோதனா
பெறுபேறு: 3ஏ (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

நான் ஆரம்பக் கல்வியை யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் கற்று தரம் 6இல் இருந்து உயர்தரம் வரை இதே பாடசாலையில் கற்றேன். நான் சிறுவயதிலேயே அப்பாவை இழந்ததால் அம்மாவின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். அம்மா சிறு உத்தியோகம் செய்த போதிலும் அக்கா, அண்ணா, என்னையும் நன்றாகப் படிக்க வைத்து பல்கலைக்கழகம் அனுப்பினார். இந்த வகையில் முதலில் அம்மாவிற்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான் சிறுவயதில் இருந்து விளையாட்டை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டமையால் க.பொ.த.சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெறமுடியவில்லை. எனினும் கலைத்துறையைத் தெரிவு செய்து தமிழ், அளவையியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன்.

என்னுடைய பெறுபேற்றுக்கு முக்கிய காரணம் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள். இவை எல்லாவற்றையும் விட முக்கிய பங்கு ஆசிரியர் போல வழிகாட்டிய நண்பர்கள்தான். பரீட்சையை அண்மித்த காலத்தில் என் கொப்பி தொலைந்த போதிலும் அவ்வளவு குறிப்பும் என் கையில் சில கிழமையின் பின் கிடைத்ததற்குக் காரணம் நண்பர்கள்தான். வீட்டிலும் என் அக்கா, அண்ணாவின் வழிகாட்டலும் எனக்குக் கிடைத்தது. இந்த வகையில் நான் படிப்பதற்குக் குறிப்பிட்ட நேரம் கிடையாது. எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போது எல்லாம் குறிப்பு எடுத்து படிப்பேன். இந்தப் பெறுபேறு என் சவாலுக்கு கிடைத்த பரிசு. உயர்தர காலத்தில் தூற்றிய பலர் பெறுபேற்றைப் பார்த்து போலியாகப் போற்றினார்கள். இப்பாடசாலையில் கற்றதால் நான் வாழ்க்கை என்பது எவ்வளவு கடினம் என்பதை அறிந்தேன்.

என் வீட்டுக்காரர்களும், நண்பர்களும் என் கல்விக்கு வழிகாட்டிச் சிறந்த பெறுபேற்றை பெற வைத்த அதிபர், சிரியர்கள், அம்மா, அக்கா, அண்ணா, நண்பர்கள் எல்லோருக்கும் கடவுளுக்கும் நன்றியைத் தரிவிக்கின்றேன்.



### ராதிகா பரஞ்சோதி
பெறுபேறு: 2ஏபி (வேலணை மத்திய கல்லூரி)

இடம்பெயர்ந்து 1995இல் சங்குவேலியில் தங்கியிருந்தோம். அங்குள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த போதும் 1996இல் மீள வேலணைக்குத் திரும்பி விட்டதால் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சேர்ந்து பின்னர் வேலணை மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டு இறுதிவரை இங்கேயே தொடர்ந்து படித்து வந்தேன். அப்பா ஆயுள்வேத வைத்தியராக இருக்கின்றார். சிறுவயதில் இருந்தே என்னை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் என் பெற்றோருக்கு இருந்தது.

புவியியல் பாடத்தில் எனக்கு ஒரு பிடிப்பு. அதனால் புவியியல், தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து இந்த மூன்று பாடங்களிலும் எனது முழுக்கவனத்தையும் செலுத்தினேன். நான் எனது பாடங்களில் மிகவும் கூடுதல் புள்ளிகள் பெறவேண்டும் என்பதில் எங்கள் கல்லூரி அதிபர் திரு. அருணகிரிநாதனும் ஆசிரியர்கள் சந்திரசேகர், திருமதி சுகந்தி சங்கர் ஆகியோரும் முழுமையான அக்கறை எடுத்துக் கொண்டார்கள். ஏனைய ஆசிரியர்களும் நல்ல அறிவுரைகளை வழங்கினார்கள். பாடசாலைக் கல்வியுடன் யாழ்.நகரில் பொருளியல் கல்லூரிக்கும் சென்று வந்தேன். இங்குள்ள மாணவர்களின் முழுமையான நம்பிக்கையும் எமது மத்திய கல்லூரிதான். முதன்முறை என்பதால் பரீட்சை எழுதும் போது சிறிதாக ஒரு பயமும் இருந்தது. எனது பயம்தான் ஒரு ஏ யைத் தவறவிடக் காரணமோ என்று நினைப்பதுண்டு.

எனக்குப் புவியியல் துறையில் நிபுணத்துவம் பெறவேண்டும் என்பதே குறிக்கோள். நூலகங்களைப் பயன்படுத்தினால் நிச்சயமாக கல்வியில் உயர்நிலையை எட்டமுடியும் என்பது எனது அனுபவம். விளையாட்டுத்துறையிலும் ஈடுபட்டு நான் சான்றிதழ்களைப் பெற்றிருப்பதும் மகிழ்ச்சிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்....



தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவிலே பிரதம விருந்தினரான வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பீ.கமலாம்பாள், கல்லூரி அதிபர் எஸ்.குட்டித்தம்பி தலைமையில் வரவேற்கப்படுவதையும் ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தின் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு விழாவிலே வித்தியாலய அதிபர் அமரர் தணிகாசலம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசிலை திருமதி இராஜேஸ்வரி தணிகாசலம் சாதனை மாணவன் செல்வன் றெனோஷன் தவயோகநாதனுக்கு வழங்குகிறார். (218)



ஊரெழு கணேச வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்ற போது இல்ல மாணவ தலைவர்கள் ஒலிம்பிக் தீபத்தின் முன் நின்று சத்தியப்பிரமாணம் செய்வதையும் அருகில் ஏனைய மாணவர்கள் அணிவகுத்து நிற்பதையும் படத்தில் காணலாம். (72)



வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் அறங்காவலர் சபை வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கியது. சபையின் சார்பாக பிரதமகுரு பிரம்மஸ்ரீ க.சுதர்சனக் குருக்கள் மாணவன் ஒருவனுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: கர்ணன்)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், அவரது பாரியார் திருமதி பி.கணேஷ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.கந்தசாமி ஆகியோர் அருகில் நிற்க கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் மங்கள விளக்கேற்றுகின்றார்.

# நல்லூரில் இடம்பெயர்ந்து வதியும் குடும்ப விவரம் திரட்டப்படவுள்ளது

நல்லூர்,பெப்.18

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு இடம்பெயர்ந்து வந்து வதியும் குடும்பங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

மதிப்பீடு மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் இன்று புதன்கிழமை காலை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202-111)

# தீவகத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் அவசிய தேவையாகவுள்ளன

## தீவகப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கருத்து

நல்லூர்,பெப்.18

தீவகத்தில் கடல் கடந்து சென்று கடமையாற்றும் ஆசிரியர்கள் தங்குவதற்கென விடுதிகளை அமைத்துக் கொடுப்பதன் மூலமே நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவுப் பகுதிகளின் மாணவர்களின் கல்வி முன்னேற்றமடையக்கூடியதாக இருக்கும். தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜோண் குயின்ரன்ஸ் இவ்வாறு கூறினார்.

நெடுந்தீவு மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 12ஆம் திகதி வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜோண் குயின்ரன்ஸ் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:

தீவுப் பகுதியில் இன்று அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இப்போது அங்கு ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை இல்லை. இளம் ஆசிரியர்கள் கடமையில் உள்ளார்கள். இப்போது கற்றல் நடவடிக்கைகள் மேலும் முன்னெடுக்கக் கூடியதாக ஆசிரியர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

இன்று வெளியிடங்களில் இருந்து கடமைக்காகக் கடல் கடந்து செல்லும் ஆசிரியர்கள் தங்குமிட வசதிகளின்றிப் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கிறார்கள். பாடசாலைகளில் இந்த ஆசிரியர்கள் தங்கக் கூடியதாக விடுதிகள் அமைக்கப்படவேண்டும். விடுதி வசதிகள் இன்மையால் சில தீவுப் பகுதிகளில் தங்கி இருக்கக்கூடிய நிலைமை சரியாக இல்லை. அதனால் பாடசாலை நேரம் முடிவடைந்ததும் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவேண்டியுள்ளது.

ஆசிரியர்கள் தங்கக்கூடியதான விடுதி வசதிகள் இருப்பின் தமது கடமை நேரத்திற்கும் அதிகமாகக் கற்பித்தல் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடமுடியும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படக்கூடியதாகவும் ஆசிரியர்கள் தமது பணியைச் செவ்வனே செய்யக்கூடியதாகவும், ஆசிரியர்களுக்கான தங்குமிட விடுதிகள் துரிதமாக அமைக்கப்படவேண்டும் - என்றார். (202-111)

# விசேட தேவையுடையோருக்கு உதவி

கோப்பாய்,பெப்.18

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் வறிய, விசேட தேவையுடையோர் நால்வருக்கு மூக்குக்கண்ணாடிகளும், ஒருவருக்குக் காது கேட்கும் கருவியும் வடமாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குறித்த பயனாளிகளுக்கு இவை வழங்கப்படவுள்ளதாகச் சமூகசேவைப் பிரிவு தெரிவித்துள்ளது. (202-72)

# இரத்ததான முகாம்

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் பிரதேச மக்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்யமுன்வர வேண்டும் என யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (202)

# தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் நலத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.18

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டனர்.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனை, வரணி ம.வி., இயற்றாலை அ.த.க. பாடசாலை, மந்துவில் அ.த.க. பாடசாலை, முன்பள்ளி ஆகியவற்றுக்கு மரக்கன்றுகள் விநியோகம் செய்ததுடன் மரக்கன்றுகளையும் நாட்டினர்.

அத்துடன் கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்கினர் எனக் கழகச் செயலாளர் லயன் அ.ச. செந்தூரன் தெரிவித்தார். (202-207)

# வாதரவத்தைப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர்; இப்போது விநியோகம் சீராக இடம்பெறுகின்றது

யாழ்ப்பாணம்,பெப்.18

வாதரவத்தைப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் சீராக இடம்பெற்று வருவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் குடிதண்ணீர் விநியோகமும் சீராக இடம்பெறாது தடைப்பட்டு வந்தது.

தற்போது மின்சாரம் தடைப்படும் சமயம் ஜெனரேற்றர் மூலம் சீராகக் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (202-224)

# வாசகர் திருமுகம்

## யாரைக் கேட்டு ரூ.50 கழிக்கிறார்கள்?

ஒய்வூதியப் பணிப்பாளரின் சார்பாக 26.01.2009 திகதியிட்ட கடிதப்படி, எம் பிரதேச செயலருடைய கணக்காளர் எமது மாசி மாத ஓய்வூதியத்திலிருந்து ரூ.50 கழித்துக் கடிதம் எழுதி மாசி மாத வவுச்சருடன் அனுப்பியுள்ளார்.

றம்பொடஎல்ல பிரதேசத்தில் விடுமுறை இல்லம் அமைக்கப் அப்பணம் செல்லுகிறதாம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் 400 பாடசாலைகளை நிர்வகித்த காலத்தில் ஆசிரியர்களின் சம்பளத்தில் 4% கழித்து ரசீது அனுப்புவது வழக்கம். அதை ஒரு குற்றமாக எடுத்து, கல்வித் திணைக்களம் இராசரத்தினம் அவர்கள் தலைவராக ஒருபோதும் இருக்கமுடியாது எனத் தீர்ப்பளித்தது. அவர் செயலாளராகவே இருந்தார். 1960இல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பெடுக்கமுன் நம் ஆசிரியர்கள் 4%கொடுக்கும் கஷ்டம் தீரும் என்று சொல்லியே அரச சேவையில் சேரமுன்வந்தார்கள். பலன் அரசு உத்தியோகத்தருக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அடிபணிந்து அலைந்ததே மிச்சம்.

50 ரூபாவுக்கு உலோபித்தனம் செய்யும் ஓய்வூதியர் என்று எம்மைத் திட்டவேண்டும். சர்வாதிகாரமாக முடிவு கட்டும் அதிகாரத்தை மேலதிகாரிகளுக்கு யார் கொடுத்தது? ஓய்வூதியர் சங்கங்களிடம் கருத்துக் கேட்டார்களா? முதலில் கழிப்பதாகச் சுற்று நிருபம் அனுப்பிச் சம்மதத்தைப் பெற்றார்களா? சனநாயகம், மனித உரிமை, மக்கள் சேவை என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலம் மட்டும்தானே!

கொக்குவில். முன்னாள் உபாத்தியார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



வட்டு. மத்திய கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை விவசாய ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டது.
வலிகாமம் வலய பாடசாலைக் கட்டடப் பரிசோதகர் பொ.செந்தில் நடராஜா மங்கள விளக்கேற்றுவதையும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆய்வு கூடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் முதலிரு படங்களிலும் காணலாம்.
கல்லூரி அதிபர் விருந்தினர்களுக்கு விவசாயச் செய்கையைக் காண்பிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சரவணன்)

# பதினான்கு ஆசனங்களை பறிகொடுத்தது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 18

நடந்து முடிந்த மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஜே.வி.பி. தோல்வியடைந்ததன் மூலம் வாக்கு முடிவுகள் வெளியிடப்படாத புத்தளம் மாவட்டத்தைத் தவிர்த்து ஏனைய நான்கு மாவட்டங்களிலும் தாம் முன்பு வைத்திருந்த 15 ஆசனங்களில் 14 ஆசனங்களை அக்கட்சி இழந்துள்ளது.

மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் 03 ஆசனங்களையும், கண்டியில் 05 ஆசனங்களையும், மாத்தளையில் 02 ஆசனங்களையும் ஜே.வி.பி. தன்வசம் வைத்திருந்தது.

அதேபோல், வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் 5ஆசனங்களையும், புத்தளம் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களையும் தன்வசம் வைத்திருந்தது.

நடந்து முடிந்த தேர்தலில் ஜே.வி.பி. தோல்வியடைந்ததன் மூலம் குருநாகல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தை மாத்திரம் தக்க வைத்துக்கொண்டு நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இருந்த ஆசனங்கள் அனைத்தையும் இழந்துள்ளது.

(சி)

## *Congratulations Mr.S.Selvathashan.*



I have appointed
Mr.S.Selvathashan as official coordinator of
Trinity College and University
for Jaffna District and North province
with effect from 01/02/2009.
He will advice, assist the students
and monitor the teaching institution for standards
and in all needed affairs where ever urgent to promote
Trinity in Jaffna District.

*We wish him every Success in this mission!!*

*Sri Lankan Representative,*
*Trinity College and University.*

TOSHIBA e-STUDIO

## ஒவ்வொரு e-Studio 166 பிரதியெடுக்கும் இயந்திரத்துடனும் 26,000 பிரதிகளுக்கான ரோனர் இலவசம்

அநேகரின் வேண்டுதலுக்கிணங்க இச் சலுகை
2009 பெப்ரவரி 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது




உலகிலேயே அதிவிரைவாக விற்பனையாகும் நவீன பிரதியெடுக்கும் இயந்திரம் ஒன்றை வாங்க விரும்பினால், இதுவே அதற்கான சிறந்த தருணம். JKOA தலைமை அலுவலகத்திற்கு அல்லது நாடெங்குமுள்ள எமது முகவர் நிலையம் ஒன்றிற்கு வாருங்கள். நீங்கள் e-Studio 166 கொப்பியர் ஒன்றை வாங்கும்போது, உங்கள் பண்டிகைக்கால குதூகலத்தைப் பெருக்கும் வகையில் ரூ.7,500/- பெறுமதியான அன்பளிப்புச் சீட்டு ஒன்று வழங்கப்படும்!

இலவசம்! ரூ.7,500/- பெறுமதியான ஷொப்பிங்!

இலவச ரோனரை அல்லது பின்வரும் அன்பளிப்புச் சீட்டுக்களில் ஒன்றைப் பெறுங்கள்.
ODEL Hameedia KEELLS SUPER ARPICO BP de SILVA M.D. GUNASENA SINGER
நிபந்தனைகள் உண்டு

- நிமிடத்திற்கு 16 பிரதிகள்
- 100 தாள் பைபாஸ் ஊட்டு
- 250 தாள் கசெட்
- யு3 அளவு வரையான பேப்பர் பாவனை
- வின்டோஸ் புனுஜ பிரின்டிங் வசதி
- ஸ்கேனிங் வசதி

சொலூஷன் கலர் மற்றும் கொப்பியர்களும் உள்ளன.

JKOA
அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்
ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2313000 ∴பெக்ஸ்: 2431745
வெப்தளம்: www.jkoa.com

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்:
சுஜீவ - 0772 047112
நெவில் - 0777 744371
நௌஷான் - 0777 770197

The 7th Frontier

குருநாகல்: கே.ரி. ஒபிஸ் ஓட்டோமேஷன் 037-5260019, உதேனி: 0777-274009. குளோபல் ஒபிஸ் சொலூஷன்ஸ் 037-2234310, உதேனி: 0777-274009. காலி: லங்கா டெக்னோலொஜி அப்ளையன்சஸ் 091-5672492, சமிந்த: 0773 475808. சினெலி ஒபிஸ் ஓட்டொமேஷன் 0777 920388 சமிந்த: 0773 475808. மாத்தறை: கே.ச. ஒபிஸ் ஓட்டொமேஷன் 041-4390288.ருவன்: 0777 771068. ஹம்பாந்தோட்டை: கே.ச. ஒபிஸ் ஓட்டொமேஷன் 047-4922622, ருவன்: 0777-771068. அனுராதபுரம்: வனோஜ் ஒபிஸ் ஓட்டொமேஷன் 025-4580054, மில்ரோய்: 0773-182838. கே.வை. ஒபிஸ் நெட்வேர்க்ஸ் 025-5675522, மில்ரோய்: 0773-182838. பதுளை: இம்தியாஸ் பக்கீர்தீன் 055-2222497, வங்கீச: 0777-809915. கண்டி: த ஒபிஸ் ஷொப், 081-2202830, எல் எச். சந்திரசேகர பிறைவேட் லிமிட்., 081-2227329, அசோக: 0777-725241. இரத்தினபுரி: நியூனெட் கொம்பியூட்டர்ஸ் 045-2228775, தினேஷ்: 0773-539568. 045-5672251. லங்கா டெக்னோலொஜி அப்ளையன்சஸ் 045-5672251, தினேஷ்: 0773-539568. எம்பிலிப்பிட்டி: யூனியன் ஒபிஸ் ஓட்டொமேஷன் 047-4924699, தினேஷ்: 0773-539568. நீர்கொழும்பு: அம்ஸ்டர் ஒபிஸ் ஓட்டொமேஷன் 031-4873732, நெவில்: 0777-744371 அம்பாறை: பிரியங்கா என்டர்பிறைசஸ் 063-2222567, வங்கீச: 0777-809915. கம்பஹா: மைக்ரோடெக் ஒபிஸ் ஓட்டொமேஷன் 0777-713757, நெவில்: 0777-744371 ஹட்டன்: வீ.கே.ஆர். டெலிகொம் 051-2222967, வங்கீச: 0777-809915. மட்டக்களப்பு: ஜிலியன்ஸ் டெக்னோ 065-2222678, வங்கீச: 0777-809915. திருகோணமலை: ட்ரிங்கோ ஸ்டேஷனர்ஸ் 026-2223071, மில்ரோய்: 0773-182838. ட்ரைடெக் கொம்பியூட்டர் 026-2220312, மில்ரோய்: 0773-182838. பொலன்னறுவை: எம்.என். ஒபிஸ் ஓட்டொமேஷன் 027-5673263, மில்ரோய்: 0773-182838. யாழ்ப்பாணம்: நோர்த் லிங்க் எஞ்ஜினியரிங் 0777-593743, அசோக்: 0777-725241. 021-4591314, எஸ்.ரி.பி. கொம்பியூட்டர் வேர்ல்ட் 021-2222674, அசோக்: 0777-725241. வவுனியா: நோர்த் லிங்க் எஞ்ஜினியரிங், 0777-593743, அசோக்: 0777-725241. கஜன் சென்டர் 024-2222476, அசோக்: 0777-725241.கிரிபத்கொடை: அம்ஸ்டர் ஒபிஸ் ஓட்டொமேஷன் 011-4813222. ருவன்: 0773-634330. சீதுவை: சி.எம்.என். என்டர்பிறைசஸ் இன்பொமேஷன் சிஸ்டம்ஸ் 2251073, ருவன்: 077-3634330. நுகேகொடை: மெட் இன்டர்நஷனல் ட்ரேடிங் கம்பனி, முதித்த: 0777-789867. மஹரகம: ஜஸ்ட் டெக்னோலொஜிஸ் 4542355, ஹசங்க: 077-2990357. பாணந்துறை: லங்கா டெக்னோரொஜி அப்ளையன்சஸ் 038-2240715, சுதர்ஷன: 077-3120714. மொறட்டுவை: ரி.எஸ்.பி. மனேஜ்மன்ற் சேர்விசஸ் 2644741, சுதர்ஷன: 077-3120714. ஹோமாகம: ஜே.ஏ.டி. ஒபிஸ் ஓட்டொமேஷன் 4542005, ஹசங்க: 077-2990357. மொனராகலை: சுப்பர்டெக் ஒபிஸ் ஓட்டொமேஷன் 047-4914699, வங்கீச: 0777-809915. கொழும்பு 7: டிஜிட்டல் மைன்ட் 077-3670507.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பருமன் அதிகரிப்பதன் காரணம் என்ன?

## தகவல் பெட்டகம்



பலர் ஒல்லியான தேகத்தையுடையவர்களாகவும், சிலர் ஊழைச் சதை பிடித்து பருத்த உடலுடன் இருப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். இவ்வகை வேறுபாட்டிற்குக் காரணம் என்ன தெரியுமா?

'எப்டிஓ' எனப்படும் ஜீன் உணவு உட்கொண்ட பின்பும் திருப்தியை ஏற்படுத்தாது மீண்டும் மீண்டும் பசியைத் தூண்டி விடுகிறது என கிங்ஸ் கல்லூரியும் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியும் இணைந்து வெளியிட்ட ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


'எப்டிஓ' ஜீனை கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் உணவுப்பிரியர்களாகவும் அதிகளவு உணவை உண்பவர்களாகவும் இருப்பார்கள். ஆயினும் உட்கொள்ளும் உணவின் அளவைப் பொறுத்தா அல்லது எரிக்கும் கலோரிப் பெறுமானத்தின் அளவைப் பொறுத்தா உடல் எடை பாதிப்படைகிறது என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை என்கிறது அந்த அறிக்கை. உடற் பருமனுடன் தொடர்புடைய 'எப்டிஓ' ஜீன் எதனையும் கொண்டிராதவர்களைவிட இரு பிரதி ஜீன்களைக் கொண்டிருப்பவர்கள் 3 கி.கி. அதிக எடையுடையவர்களாகவும், ஒரு பிரதியை மட்டும் உடையவர்கள் 1.5கி.கி. அதிக எடையுள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மேலை நாடுகளில் இவ்வகை ஜீன் பரிசோதனை செய்து கொள்வது சாத்தியம். இருப்பினும் அப்பரிசோதனை நம் நாட்டில் இன்னும் பிரபலமாகவில்லை. எதிர்காலத்தில் அவ்வகைப் பரிசோதனையை நமது நாட்டில் செய்யத்தக்க வாய்ப்பு உருவாகும். உங்களுக்கும் அவ்வகை ஜீன் உள்ளதா என அறிந்து தகுந்த சிகிச்சை பெற்று உடம்மை 'ஸ்லிம்' ஆக வைத்திருந்து, ஆரோக்கியமாக வாழ வழிபிறக்கும்.

எஸ்.பேராசிரியன்.




# மரங்களின் வளர்ச்சிக்கு 'ஓசோனும்' ஒரு தடை!



ஓசோன் படலம் வாயு மண்டலத்தின் உயரமான அடுக்குகளில் காணப்படுகிறது. இது சூரியனின் கதிர் வீச்சி லிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. அதேபோல தரைப் பகுதி யிலும் ஓசோன் உள்ளது. இது தாவரங்கள், விலங்குகளைப் பாதிக் கிறது. இதுபற்றி விக்டோரியா விட்டிக் என்ற விஞ்ஞானி ஆராய்ச்சி செய்தார்.

அவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்: பெற்றோலியம் மற்றும் நிலக்கரி எரிபொருள் களைப் பயன்படுத்துவதனால் ஓசோனின் அளவு அதிகரிக்கிறது. வாயு மண்டலத்தில் ஒட்சிசன் உள்ளதைப் போல ஓசோன் வாயுவும் உண்டு. தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்த அளவைவிடத் தற்பொழுது ஓசோன் 4 மடங்கு அதிகரித்து விட்டது. அதனால் மரங்களின் வளர்ச்சி கி.பி. 1800களில் இருந்ததை விடத் தற்போது 7 சதவீதம் குறைந்துள்ளது. இது 2100 ஆம் ஆண்டளவில் இன்னும் 10 சதவீதம் அதிகரித்து 17 சதவீதம் ஆகிவிடும். இது மரங்களின் காபன் தன்மயமாவதைத் தடுத்து மரங்களின் வளர்ச்சி மற்றும் அதன் பொருண்மையைக் குறைக்கும்.

இது ஊசி இலை மரங்களைவிடப் படர்ந்த இலையுடைய மரங்களை எளிதில் தாக்குகிறது. மரங்களின் வேர்ப்பகுதியைப் பாதிப்பதன் மூலம் புயலால் எளிதில் சேதப்படுத்தப்படுகிறது என்றார்.

# மனிதம் எங்கே?



மனிதம் எங்கே....?
பூமி எத்தனை தடவை
இப்படியே நகர்வது
மனிதம் மரித்து
மரணம் சகாயமாகக்
கிடைக்கும் - இங்கே
அஹிம்சை அடிமையா....?
வேட்டுக்கள் அற்ற
வெண்மை வேண்டும் இந்த
ஜனங்களுக்கு...!..
வாக்குமாற்ற வாக்குறுதி
வேண்டும் இவர்கள்
செவிகளுக்கு....
சமாதான அரங்கில் சில
எறிகணைகள்
அநியாய அழிப்பில் கண்ணீர்....
வீழ்ச்சிகள்
புத்தம் எங்கே....?
யேசு எங்கே.....? என
அலறுது ஒரு வட்டாரம்.....
மீட்சி இல்லை
மீண்டும்வர கால்கள் இல்லை
இன்னுமொரு யுகமிருந்தால்
மனிதம் பிறந்து வரட்டும்......
இங்கே
அப்போது யுத்த அரங்கில்
சமாதானம் சிறகடிக்கும்......

சா.ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

# மம்மியை வைத்து உருவப்படம் தயாரிப்பு



அதிநவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி 3000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த 30 வயது அழகிய எகிப்திய பாடகி யின் மம்மியை வைத்து அவரது உருவப்படத்தை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

அதி துல்லிய சி.ரி ஊடு காட்டும் கருவிகளை உபயோகித்து மேற்படி மம்மி வைக்கப்பட்டிருந்த பெட்டியைச் சேதப்படுத்தாமல் அந்த மம்மி தொடர்பான தரவுகளைக் கணித்து இந்த உருவப்படம் வடிவமைக் கப்பட்டுள்ளது.

மேற்படி மம்மியின் கன்னம் ,வாய் அமைப்பு என்ப வற்றை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் அந்த மம்மிக்குச் சொந்தமான பெண் ஒரு பாடகி என்பதைக் கண்டறிந்ததாக சிக்காகோ மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானொலிக் கதிர்ப்பு நிபுணரான மைக்கல் வன்னியர் தெரிவித்தார்.

# நம்பிக்கை பிறக்க வேண்டும்

குழந்தைப் பரு வத்தில் தாயிடம் வாழ்க்கை என்பது என்ன? என்று கேட் டேன். அதற்கு அவள் 'துன்பம்' என்று தன்னுடைய பதிலை அளித்தாள். விளையாடும் பருவத்தில் விளையாட்டிடம் கேட்டேன். அது தோல்வி என்று குறிப்பிட்டது. பள்ளிப் பருவத்தில் என் ஆசிரியரிடம் கேட்டேன் அவர் 'போராட்டம்' என்றார். காதல் பருவத்தில் என் காதலனிடம் கேட்டேன். அவன் 'வீண்செலவு' என்று விளம்பினான். யுவதிப் பருவத்தில் ஓர் யுவதியிடம் கேட்டேன். அவள் 'தேடல்' என்று அறைந்தாள். முதுமைப் பருவத்தில் ஒரு பாட்டியிடம் கேட்டேன். அவள் 'முடிவு' என்று உரைத்தாள்.

இதே கேள்வியை என் மனத்திற்குள் கேட்டேன். அது ஒவ்வொரு மனிதனின் ஆரம்பம் என்றது. பிறப்பில் துன்பமும், விளையாட்டில் தோல்வியும், படிப்பில் போராட்டமும், காதலில் செலவும், இளமையில் தேட லும், முதுமையில் முடிவும் உண்டு என்று முடிவு செய் பவர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அது பிறந்து விட்டால் முதுமை என்பதும், தோல்வி என்பதும் கிடையாது. ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை பிறக்க வேண்டும்.

நுபீஷா, யாழ்ப்பாணம்.

# சமாதானத்திற்காய்



சமாதானத்திற்காய்.....
சமாதானம் வேண்டுமென
பச்சிளம் குழந்தை முதல்.....
தள்ளாடும் வயதினர் வரை...
காத்திருக்கின்றனர்
வருகின்றது......
சமாதானமல்ல.....
யுத்தங்களின் சத்தமும்....
மரண ஓலங்களும்தான்
என்றுதான் இந்த
அவலநிலை மாறிடுமோ.....??

யசோதா இராமநாதன்,
நாவற்குழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் புலிகளின் ஆயுதங்கள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன

## பாதுகாப்பு அமைச்சுக் கூறுகிறது

கொழும்பு,பெப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து புதிதாகக் கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் இராணுவத்தினர் நடத்திவரும் தேடுதல் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளினால் கைவிடப்பட்ட ஆயுத தளபாடங்கள், எரிபொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது சுதந்திரபுரத்திற்குத் தெற்கே இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன என்றும், இராணுவத்தினரை எதிர்த்து தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் மீது படையினர் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தி சேதங்களை விளைவித்துள்ளனர் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை, விசுவமடு பகுதியில் இராணுவத்தினரிடம் 31 சிவிலியன்கள் வந்து சேர்ந்தனர் என்றும், புல்மோட்டை கடற்பரப்பில் கடற்படையினரிடம் படகுகளில் 53 பேர் வந்தடைந்தனர் என்றும், யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதிக்கு 25 பேர் சென்றடைந்துள்ளனர் எனவும் இராணுவத் தலைமையகம் குறிப்பிட்டிருக்கின்றது. (சி)

## நல்லூர் பிரதேசசபை அபிவிருத்திப் பணிக்கு 12 லட்சம் ரூபா நிதி

யாழ்ப்பாணம்,பெப்.18

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கென 12 லட்சம் ரூபா கமநெகும திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

குமரக்கோட்ட நூலகப் புனரமைப்புப் பணிகளுக்கென 10 லட்சம் ரூபாவும் வராகி சனசமூக நிலையத்துக்கு குழாய்க்கிணறு அமைக்க 2 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களை விரைவில் பூர்த்தியாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார். (202-111)

# பௌதீக வளங்களைப் பெருக்குவதோடு கல்வித் தரத்தையும் உயர்த்த வேண்டும்

## யாழ்.அரச அதிபர் கருத்து



சித்தங்கேணி,பெப்.18

எமக்குத் தேவையான வளங்களை நாம் எவ்வாறு கேட்டுப்பெற உரிமை உள்ளதோ அதேபோன்று எமக்கென்று சில கடமைகளும் உண்டு என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாங்கள் பௌதீக வளங்களை மட்டும் பெருக்கிவிட்டால் மட்டும் போதாது. அதனூடாக கல்வித்தரமும் உயர வேண்டும். கல்வித்துறை என்று சொல்லும் போது மக்களை மிகவும் ஆழமாக வழி நடத்திச் செல்கின்ற சிறந்த பிரஜைகளை உருவாக்குகின்ற, சிறந்த தலைவர்களை உருவாக்குகின்ற, நல்ல முறையிலே வளர்ந்து வரக் கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்கக் கூடிய, எல்லாவற்றுக்கும் மேலாக எமது பண்பாடு, கலாசார விழுமியங்களையும் கட்டிக் காப்பாறுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழி சமைக்கின்ற ஒரே ஒரு துறை கல்வித்துறை ஆகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

கடின உழைப்புக்கு நிகர் இல்லை என்பதை நாம் எல்லோரும் படித்ததைப் போன்று எம்முடைய பிள்ளைகள் சிறந்த கல்விமான்களாக சமுதாயத்தின் வழிகாட்டிகளாக உருவாக்குகின்ற பாரிய பொறுப்பும், கடமையும் எங்கள் எல்லோருக்கும் உண்டு.

ஒரு கால கட்டத்திலே தரப்படுத்தல் என்று ஒன்று கொண்டு வரப்பட்டது என்றால் அதற்கு முக்கிய காரணம் யாழ்.பல்கலைக்கழகத்திலே பொறியியலாளர்கள், வைத்தியர்கள் ஏனைய துறைசார் நிபுணர்கள் அதிகமாக உருவாக்கப்பட்டார்கள். அதைப் பார்த்த காரணத்தினால் தான் ஒருசமநிலை கொண்டுவரப்பட வேண்டும். அவர்களுக்குரிய பங்கை அவர்கள் பெற்றுக் கொண்டால் போதும் என்ற ஒரு விகிதாசார அடிப்படையைக் கொண்டு வந்து அதன் மூலம் இந்த தரப்படுத்தல் நடைமுறைப் படுத்தப்பட்டது.

அந்த காலகட்டத்திலே நாம் எல்லோரும் தலை நிமிர்ந்து செல்லக்கூடிய அளவிற்கு யாழ்.மாவட்டத்தின் கல்வியின் தரம், கற்றலின் தரம், கற்பித்தலின் தரம் எல்லோருமே மெச்சக்கூடிய அளவிற்கு நன்றாக இருந்தது. ஆனால் நாம் பல்வேறு சீரழிவுகளை சந்தித்ததன் விளைவாக காலப்போக்கில் அந்தப் பெருமைகளைக் கட்டிப் பாதுகாக்கக் கூடிய அளவிற்கு நிலைமை இருக்கவில்லை.

ஆகவே என்னுடைய அன்பான வேண்டுகோள் என்னவென்றால் இன்று கடந்த சில ஆண்டுகளாக பல்கலைக்கழக புகுமுக விகிதாசாரங்களை பார்க்கின்றபோது திறமை அடிப்படையிலேயே செல்கின்றவர்களின் அளவு மிகவும் குறைந்து கொண்டு வருகிறது. அதற்கு காரணம் இல்லாமல் இருக்க இயலாது.

ஆகவே எங்கள் எல்லோருக்குமே உள்ள பாரிய பொறுப்பும், தார்மீக கடப்பாடும் அவ்வாறான ஒரு சமுதாயத்தை, கல்வித்திறமையுள்ள பிள்ளைகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்க வேண்டுமானால் கல்விச் சமூகமும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எல்லோருமே அல்லும் பகலும் கல்வியைப் பற்றி சிந்திக்க வேண்டும். எனவே நாம் இழந்த கல்வியை மீண்டும் பெறுவதற்கு எமது முற்கால சமூகம் எவ்வாறு அன்று கல்விமான்களை உருவாக்கியதோ அவ்வாறு உருவாக்குவதற்குரிய பணிகளிலே நாங்கள் மீண்டும் எங்களை முற்று முழுதாக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். அதைவிட எமக்கு வேறு வழியில்லை - என்றார். (202-112)

# புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறுவோரின் பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் அளிக்குமாம்!

## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

கொழும்பு,பெப்.18

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறி பாதுகாப்புப் படைகளையோ அல்லது செஞ்சிலுவைச் சங்கத்தினரையோ சென்றடையும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு தனது அரசு உத்தரவாதமளிக்கும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு 'பேஜ்' இணையத்தளத்திற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொலைபேசி மூலம் அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்களிடமிருந்தான உதவிகளுக்கு இணங்க பாதுகாப்புப் படையினரிடம் இருந்தும் அனைத்து அத்தியாவசிய தேவைப்பாடுகளுக்கான உதவிகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாயிருக்கும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இடம்பெயர்ந்த பொதுமக்களை முகாம்களில் மூன்று வருடகாலத்திற்கு வைத்திருக்க அரசு திட்டமிடுகிறது எனக் குறிப்பிடும் ஊடக அறிக்கைகள் குறித்து மறுப்புத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இடம்பெயர்ந்த மக்களை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக மீளக்குடியமர்த்த ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனவும் கூறினார்.



சரசாலைப் பகுதியில் வாகனத்தில் கொண்டு வரப்பட்ட மலக்கழிவு கொட்டப்படும் போது கிளிக் செய்யப்பட்ட படம்.

இதனால் அப்பகுதி மக்களுக்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மலக்கழிவு கொட்டப்படும் நீர் நிலையில் கால்நடைகள் நீர் அருந்துவதும் குறிப்பிடத்தக்கது. (207)

# மருத்துவ வசதியின்றி முல்லைத்தீவில் படுகாயமடைந்தவர்கள் பேரவலம்

## முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, பெப். 18

மனித குலம் சந்தித்திராத பேரவலத்தை வன்னி நிலப்பரப்பில் மருத்துவ ரீதியாக தற்போது எதிர்கொள்ள நேர்ந்துள்ளது என முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் து.வரதராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

நாள் தோறும் நூற்றுக்கணக்கில் ஷெல் தாக்குதல்களினால் படுகாயமடைந்தவர்கள் எடுத்து வரப்படுகின்றனர். மருத்துவமனை என்று சொல்ல முடியாது, ஆனால் முதலுதவி வழங்கும் இடத்தில் வைத்து சிகிச்சைகள் வழங்கி வருகின்றோம்.

மருத்துவமனையில் காணப்படும் வசதியீனங்கள் உயிர்களை நாள்தோறும் பறித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

தரைப்பாதை மூடப்பட்டிருப்பதன் காரணமாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் கப்பலில் 700 வரையான நோயாளர்கள் திருகோணமலை மற்றும் பிற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மருத்துவ நெருக்கடி தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம் - என்றார். (சி)

# இலங்கையில் போர்நிறுத்தம் கோரி 21இல் தமிழகம் முழுவதும் மனிதச்சங்கிலிப்போர்

## அமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, பெப்.18

இலங்கையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தி எதிர்வரும் 21ஆம் திகதி தமிழகத்தில் தி.மு.க. சார்பில் மனிதச்சங்கிலிப் போராட்டம் நடைபெறும் - என்று தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் இராணுவமும் விடுதலைப் புலிகளும் தங்கள் தாக்குதல்களை நிறுத்தினால் தான் போர்நிறுத்தம் என்பது அர்த்த முள்ளதாக இருக்கும். அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் வகையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். போர் நிறுத்தத்தை வலியுறுத்தி எதிர்வரும் 21ஆம் திகதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழகத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெறும் - என்றுள்ளது.



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

போதகர் ரி.எச்.வசந்தகுமாருடன் கல்லூரி மாணவர்கள் ஒளிவிழா கீதம் இசைப்பதையும், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வினையும் முதலிரு படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்டோர் மத்தியில் நத்தார் தாத்தா பரிசில்கள் வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண உதவிக் கணக்காளர் நாயகம் எஸ்.கனகசிங்கம் மற்றும் திருமதி ரஞ்சினி கனகசிங்கம் ஆகியோரை வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அழைத்து வருவதை முதல் படத்திலும் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை நடைபெறுவதை இரண்டாவது படத்திலும், வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு விருந்தினர் திருமதி ரஞ்சினி கனகசிங்கம் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# சண்டிலிப்பாய் பிரதேச எல்லே போட்டி இளவாலை யங் ஹென்றீசியன் சம்பியன்

வலி.வடக்கு,பெப்.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் 3 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. கஜன், நிரோஸ், றொட்னி ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

நான்கு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தது. தனராஜ், ஜெனாத் ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களைப் பெற்றனர்.

யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற ஓட்டங்களின் அடிப்படையில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் மாதகல் சென்.தோமஸ் யுத் விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் மாகியம்பதி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் சென்.தோமஸ் யுத் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற ஓட்டங்களினால் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகத்தை வென்று 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

## வலைப்பந்தாட்டத்தில் தென்னகத் தாரகை வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.18

தென்மராட்சிப் பிரதேச பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாவகச்சேரி தென்னகத் தாரகை விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இரண்டாவது இடத்தை வரணி இளைஞர் வி.கழக வலைப்பந்தாட்ட அணி பெற்றுக்கொண்டது.

கடந்த திங்கட்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. (50-207)



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட இணுவில் இந்து விளையாட்டுக் கழக வீராங்கனைகளுடன் விளையாட்டு அலுவலர் செல்வி சி.மனோன்மணியும் படத்தில் காணப்படுகின்றார். (படம்: தேசன்)

# வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் துரையப்பா விளையாட்டரங்கில் போட்டிகள்

வலி.வடக்கு,பெப்.18

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஏற்பாட்டில், வசந்த எழுச்சிப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வசந்த எழுச்சிப் பேரவைத் தலைவர் எஸ்.மரியதாஸ் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆண்கள், பெண்கள் அணிகளின் காட்சி உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெற்றன.

இந்த விளையாட்டு வைபவத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம்,மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போட்டியில் கலந்துகொண்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் வழங்கிக் கௌரவித்தார். (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# கரப்பந்தாட்டப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் வெற்றி

வலி.வடக்கு,பெப்.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக் கழகமும் பிரதீப் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை வெற்றிபெற்ற பிரதீப் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

முதல் இரண்டு சுற்றுக்களையும் முறையே பிரதீப் விளையாட்டுக் கழகம் 25:20, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

மூன்றாம் இடத்தைச் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது. (50-86)



யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் 'பட்டபிளை' விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. வெற்றியீட்டிய 'பட்டபிளை' விளையாட்டுக் கழக வீராங்கனைகளுடன் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம், யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் பேர்னாட் பெரேரா, மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (படம்: தேசன்)

# வலைப்பந்தாட்டப் போட்டியில் வென்றது பருத்தித்துறை ஐக்கிய வி.க.

கரவெட்டி,பெப்.18

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

வல்வை றெயின்போ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.தோமஸ் அணி மோதியது. இதில் ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன. இறுதியில் சென்.தோமஸ் அணி வல்வை விளையாட்டுக் கழகத்தை 3 புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது.

அதன்பின் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் சென்.தோமஸ் அணியும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் முதல் பாதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 18:12 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இடைவேளை முடிந்து ஆட்டம் ஆரம்பித்தபோது சென்.தோமஸ் அணியினர் மிக விறுவிறுப்பாக ஆட்டத்தைக் கொண்டு சென்றனர். இருந்தபோதும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சென்.தோமஸ் கழகத்தினரின் ஆட்டவேகத்தினைக் கட்டுப்படுத்தி விளையாடினர். இதனால் இடைவேளையின் பின்னர் இரு அணிகளும் 15 என்ற புள்ளிகளைப் பெற்றனர்.

ஆட்டமுடிவில் 33:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டது.

இறுதியாட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துப் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 27:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியீட்டி 2009ஆம் ஆண்டிற்கான வலைப்பந்தாட்டச் சம்பியனைத் தனதாக்கிக்கொண்டது. (50-70)

## தென்மராட்சிப் பிரதேச போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

தென்மராட்சிப் பிரதேச பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான எல்லே மற்றும் பெண்களுக்கான கரப்பந்து போட்டிகள் கடந்த 15ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் நாவற்குழி மகாவிஷ்ணு வி.க. அணி முதலிடத்தையும், கொடிகாமம் துர்க்கா வி.க.அணி இரண்டாமிடத்தையும் பெற்றன.

எல்லே போட்டிகளில் ஆண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி வி.க. அணியும் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி தென்னகத் தாரகை வி.க. அணியும் முதலிடம் பெற்றன. இரண்டாம் இடத்தினை மட்டுவில் கலைவாணி வி.க. அணியும், பெண்கள் பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் வி.க. அணியும் பெற்றன. (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**குமாரவேலு சபாநாயகம்**
(ஓய்வுபெற்ற முதலியர்)
திதி:- தேய்பிறை நவமி

தோற்றம்:
12.02.1929
மறைவு:
01.03.2008

நாமெல்லாம் அறிவுடன் வளமாய் வாழ வழிவகுத்தவரே!
விண்ணில் உறைந்து ஓராண்டு ஆனாலும்
உங்கள் இனிய நினைவுகள் என்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்......

தம்பசிட்டி வீதி, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10.06.1957
உதிர்வு: 01.03.2008



**அமரர் பரமு தில்லைநாதன்**

இமை போல் எமைக்காத்த இமயமே
எம்மை விட்டு மின்னலென
இறைவனிடம் சேர்ந்தாயே
எங்கள் உள்ளங்களில் நிறைந்துள்ள நீ
ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டுகள்
நிறைந்து நிற்பாய் எம் மனதில்.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுவில் கிழக்கு,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில்.
அன்னாரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

### கலந்துரையாடல்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிற்கிடையேயான கலந்துரையாடல் இன்று மு.ப.10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
(203-72)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள NET CAFE ஒன்றிற்கு பாவித்த நல்ல நிலையிலுள்ள சுழல் கதிரைகள் (Wheel Chairs) தேவை.

தொடர்புகளுக்கு:
0718334264

### விண்ணப்பம் கோரல்

திருகோணமலையில் அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து நடத்த ஆசிரியர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன. விண்ணப்பதாரிகள் திருமுறைகளை பண்ணுடன் ஓதக் கூடியவராகவும், சமயச் சொற்பொழி வுகள் ஆற்றக் கூடியவராகவும், சைவ ஆசார சீலராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை கூ.சோமசுந்தரக் குருக்கள் செயலாளர், அனைத்துலக சைவகுருமார் பேரவை, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரிக்கு இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட் கப்பட்டுள்ளது. (201)

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
**No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250**
**Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi**

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2008 80%OFF

நெல்லியடியிலும் நாளை 1..

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office<br>3 Months<br>1500/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing<br>3 Months<br>~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing<br>4 Months<br>~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~10000~~ 2000/= | Diploma in Auto CAD<br>3 Months<br>~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package<br>3 Months<br>~~10750~~ 2150/= | Diploma in Computer Science<br>4 Months<br>~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science<br>3 Months<br>~~13000~~ 2600/= |

**50% Off Advance Courses**

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |

**Computer Express** ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறையயிற்சி

MARCH 15 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

| யாழ்நகரில் ஆரம்பம் | நெல்லியடியில் ஆரம்பம் |
|---|---|
| Batch I: 20/02/2009 -09AM | Batch I: 19/02/2009 -09AM |
| Batch II: 21/02/2009 -09AM | Batch II: 21/02/2009 -10AM |
| Batch III: 22/02/2009 -09AM | Batch III: 22/02/2009 -10AM |
| Batch IV: 25/02/2009 -09AM | Batch IV: 24/02/2009 -09AM |

# மரண அறிவித்தல்

## திருமதி குமாரசாமி கேதீஸ்வரி



(சி/557182)

யாழ்.நல்லூர், சட்டநாதர் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் டொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி கேதீஸ்வரி 15.02.2009 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குமாரசாமி பரமசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கண்ணுச்சாமி- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரமசாமி- சொர்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், தையலாம்பாள், இராசாம்பாள், சாந்தநாயகி, சந்தானகிருஸ்ணன், பெருமாள்பிள்ளை, தில்லைநாதன் மற்றும் தையல்நாயகி (இலங்கை) ஆகியோரின் சகோதரியும் ரவிச்செல்வன் (லண்டன், HAPPY TEX) , பிறேமச்சந்திரன் (பிரான்ஸ்), சந்திரிக்கா, ஸ்ரீதரன், ரமணன், ராகவன், கே வன், மாதவன் (பிரான்ஸ்), சசிரேகா, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தாயும் லதாங்கி, செல்வாம்பிகை, திருஞானசம்பந்தன், ஜெயந்தி, சவித்தர், சுமித்ரா, செல்வ ராணி, சிவச்செல்வி, பாலமுரளி, தர்மராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியும் துவாரகன், கார்த்திகன், சுஜிந்தன், கோசலை, சுகன்யா, பிரசிந்தா, பிரதீனா, பிரியந்தன், மொகிசன், ரோசான், திவ்யா, மீரா, அனுஷன், லக்ஷன், அம்மன், ஆகாஷ், ஹரிஷ், சௌமியா, பிரவீன், கோகுலன், கார்த்திக், அபினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 467, Sherbourne St இல் அமைந்துள்ள Rosar- Morrison Funeral Home இல் புதன்கிழமை (18.02.2009) 5 மணி தொடக்கம் 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மறுநாள் வியாழக்கிழமை (19.02.2009) 11 மணி தொடக்கம் 1 மணி வரை 635, Parliament Stree Toronto இல் அமைந்துள்ள ST- James Crematorium மயானத்தில் (Wellesley & Parliament) இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: ரவிச்செல்வன் 011447534369154,
பிறேமச்சந்திரன் (பிரான்ஸ்) 33 14896 1826,
ஸ்ரீதரன் (நல்லூர் வீடியோ), ரமணன் 416 797 0571,
ராகவன் 416 305 25 12, வாணி 905 209 9409.

தகவல்:
கண்ணுச்சாமி தையல்நாயகி (சகோதரி),
சட்டநாதர் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 077 5224662

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது சுதந்திர தினத்தை கொண்டாடியது கொசோவா

கொசோவா, பெப்ரவரி 18

கொசோவா நேற்று செவ்வாய்க்கிழமை தனது முதலாவது சுதந்திரதினத்தை கொண்டாடியது.

கடந்த வருடம் சேர்பியாவிலிருந்து கொசோவா பிரிந்து தனிநாடாகப் பிரகடனம் செய்தது.

தற்போது தனிக்கொடி, அரசியலமைப்பு, தேசிய கீதம் என்பன உள்ளன.

கொசோவாவின் தலைநகராக பிரிஸ்ரீனா விளங்குகின்றது.

''இது எமது நாட்டின் முதலாவது சுதந்திர தினமாகும். இந்த முதலாவது வருடம் வெற்றிகள் நிறைந்தவையாக அமைந்தன. எமது நாட்டை அனைத்து நாடுகளும் அங்கீகரிக்கும். எமது நாடு 6 வீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது.பல ஆயிரம் வேலைவாய்ப்புகளையும் வழங்கியுள்ளன. அபிவிருத்தி பணிகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது நாட்டிலுள்ள சிறுபான்மையினரான சேர்பியர்களும் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளன என்று சுதந்திரதின உரையில் பிரதமர் காஸிம் தாஸி தெரிவித்தார்.

கொசோவாவில் மக்கள் அனைவரும் வெடி கொளுத்தி தமது சுதந்திரதினத்தை கொண்டாடினார்கள்.

உலகத்தில் உள்ள 192 நாடுகளில் ஜப்பான், அமெரிக்கா உட்பட 54 நாடுகள் மட்டுமே கொசோவாவை அங்கீகரித்துள்ளன.

கொசோவாவில் 20 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் 90 வீதமானோர் அல்பேனியர்கள். ஏனையோர் சேர்பியர்கள் ஆவர்.

எனினும் கொசோவாவை இதுவரை சேர்பியா தனிநாடாக அங்கீகரிக்கவில்லை.

ரஷ்யாவின் ஆதரவுடன் சேர்பியா ஐக்கிய நாடுகள் சபையில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளில் 22 நாடுகள் கொசோவாவை தனி நாடாக அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஸா மீது நேற்று இஸ்ரேல் தாக்குதல்

காஸா, பெப். 18

காஸா மீது நேற்று இஸ்ரேல் மீண்டும் வான் தாக்குதலை நடத்தியுள்ளது. பதிலுக்கு காஸா பகுதியிலிருந்து ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என பி.பி.ஸி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

தெற்கு காஸாவின் தலைநகரான கான் யூனிற்கு அருகிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் மோட்டார் சைக்களில் சென்ற ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இத்தாக்குதலில் உயிரிழந்தவர்கள் தீவிரவாதிகள் என காஸா தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜப்பானின் நிதி அமைச்சர் பதவி விலகத் தீர்மானம்



டோக்கியோ, பெப். 18

இத்தாலியின் தலைநகரான ரோமில் அண்மையில் நடைபெற்ற ஜி - 7 நாடுகளின் செய்தியாளர் மாநாட்டில் ஜப்பானின் நிதி அமைச்சர் சோச்சி நிக்கஹாவா குடிபோதையில் இருந்தார் என செய்திகள்வெளியாகியமையை அடுத்து அவர் அப்பதவியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

''நாடாளுமன்றத்தில் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டதும் தான் பதவி விலகப் போகிறேன்'' என்று நிதி அமைச்சர் அறிவித்திருந்தார். எனினும், அதற்கு அரசுடன் இணைந்திருக்கும் கூட்டணிக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஏனெனில், பட்ஜெட் தாக்கல் செய்ய நீண்ட காலம் எடுக்கும் என்பதால் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

நிதி அமைச்சர் பதவி விலகும் வரை அமைச்சரவை நீடிக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

## ஈராக்கில் குண்டுத்தாக்குதல்கள்

கர்பால, பெப். 18

ஈராக், கர்பால நகர் பகுதியில் ஷியா முஸ்லிம் யாத்திரிகர்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட இரு வேறு குண்டுத் தாக்குதலில் 8 பேர் கொல்லப் பட்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

வீதியோர குண்டுத்தாக்குதல்களில் இரண்டு மினிபஸ்கள் சிக்கின. அதிலேயே இந்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வாரம் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் 60 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 170 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனை அமெரிக்க உறவை பாதிக்கச் செய்யும்

## ஹிலாரி கிளின்ரன் கூறுகிறார்

டோக்கியோ, பெப். 18

வடகொரியா ஏவுகணைப் பரிசோதனைகளை நடத்துவது அமெரிக்காவுடனான உறவுகளைப் பேண வழிவகுக்காது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் நேற்றுத் தெரிவித்தார்.



நேற்றைய செய்தியாளர் சந்திப்பின் போது......

நேற்றுமுன்தினம் ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் நேற்று ஜப்பானின் வெளிவிவகார அமைச்சரை சந்தித்தப் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் கூறினார்.

''வடகொரியா தனது அணுவாயுதத் திட்டத்தை வழங்கும் பட்சத்தில் அந்நாட்டுப் பொருளாதார உதவி, இராஜதந்திர உதவி மற்றும் அந்நாட்டுடன் சமாதான ஒப்பந்தம் ஆகியவை பேணப்படும்'' என்றும் ஹிலாரி கிளின்ரன் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான நேசக்கரத்தை ஆதரிக்காமல், அந்நாட்டுடன் பிரச்சினைகளை அதிகாரித்தால் சர்வதேசம் தமக்குக் கூடுதலான உதவிகளை வழங்கும் என வடகொரியா நம்புகிறது என்றும் அவதானிகள் நம்புகின்றனர்.

அமெரிக்காவின் ஒரு மாநிலத்தை தாக்கக்கூடிய அதி நவீன தொலைதூர ஏவுகணையை வடகொரியா இம்மாத முடிவுக்குள் பரீட்சிக்கவுள்ளது என தென் கொரிய செய்திச் சேவைகள் தெரிவித்தன.

''ராஎபோடல் - 02 என்ற ஏவுகணையையே அது பரீட்சிக்கவுள்ளது என அந்தச் செய்திச் சேவை தெரிவித்தது.

# விண்ணில் சிதறிய செயற்கைக்கோள்களால் வானில் பறக்கும் விமானங்களுக்கு ஆபத்து

## அமேரிக்கா எச்சரிக்கை

நியூயோர்க்,பெப். 18

அமெரிக்க மற்றும் ரஷ்ய நாடுகளினது செயற்கைக் கோள்கள் அண்மையில் வான்வெளியில் மோதி வெடித்துச் சிதறியன. அவற்றின் உடைந்த பாகங் களால் வானத்தில் பறக்கும் விமானங்களுக்கு ஆபத்து என்று அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள விமானிகளுக்கு அந்த மையம் இது தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு வெடித்துச் சிதறிய செயற்கைக்கோள்களினது உடைந்த பாகங்கள் புவியின் சுற்றுப்பாதையில் வலம் வருகின்றது. அதனால் மற்றைய செயற்கைக் கோள்களுக்கும் அவை பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், வானத்திலிருந்து தீப்பந்துபோல ஒரு பொருள் அமெரிக்காவில் டெக்சாஸ் நகரில் விழுந்தது. செயற்கைக்கோளின் உடைந்த பாகங்கள் தான் டெக்சாஸ் நகரில் விழுந்தது எனச் சிலர் தெரிவித்தனர் எனினும் அவர்கள் இதுபற்றி பல்வேறு அமைப்புகளிடம் முறைப்பாடு செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற அமைப்பு உலகம் முழுவதும் உள்ள விமானிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதில், விண்ணில் செயற்கைக் கோள்கள் மோதிக்கொண்டதைத் தொடர்ந்து உடைந்த பாகங்கள் பூமியை சுற்றிக் கொண்டிருக்கின்றன எனவும் அவை பூமி மீது விழுந்து விமானங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உடைந்த செயற்கைக்கோள்களின் பாகங்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பூமியை சுற்றிக்கொண்டு இருக்கும் என்றும் அவை செயற்கைக் கோள்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. டெக்சாஸ் நகரில் விண்ணிலிருந்து விழுந்தவை, செயற்கைக்கோளின் உடைந்த பாகங்கள் தானா என்பது தெரியவில்லை. அவை உடைந்த பாகங்களாக இருக்கலாம். எங்களுக்கு உறுதியாக தெரியவில்லை என்றும் ஏவியேஷன் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மும்பைத் தாக்குதலில் சம்பந்தப்பட்டோரை பாகிஸ்தான் காப்பாற்ற முயற்சிக்கக்கூடாது

## முஷாரப் கருத்து



இஸ்லாமாபாத், பெப். 18

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளைக் காப்பாற்றவோ, அடைக்கலம் கொடுக்கவோ பாகிஸ்தான் அரசு முயற்சிக்கக் கூடாது என்று அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதி முஷாரப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து பாகிஸ்தான் பத்திரிகை ஒன்றுக்கு அவர் பேட்டியளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

''இந்த விடயத்தில் உலகத்தை ஏமாற்றும் வகையில் நமது நடவடிக்கை இருக்கக்கூடாது. பாகிஸ்தானும், மக்களும் தீவிரவாதத்துக்கு எதிராக உள்ளனர். இத்தகைய நடவடிக்கைகளை ஆதரிக்கவில்லை.

எனவே, மும்பையில் தாக்குதல் நடத்தியவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களை காப்பாற்றவோ, அடைக்கலம் கொடுக்கவோ முயற்சி எடுக்கக்கூடாது. அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்காக பாகிஸ்தானை பலவீனமான நாடு என்ற அர்த்தம் அல்ல. அணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் கொண்ட பலமான நாடு. எனவே, யாருக்கும் வசப்பட வேண்டிய அவசியம் பாகிஸ்தானுக்கு இல்லை. எனவே, யாரும் பாகிஸ்தானை தவறாக எடை போட்டுவிடக் கூடாது.

நான் இதை இந்தியாவுக்கு ஆதரவாகச் சொல்வதாகக் கருதக்கூடாது. எனது மனதில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்கிறேன். முழுநேர அரசியலுக்குத் திரும்பும் எண்ணம் எனக்கு இப்போது இல்லை'' - என்றார்.




வடகொரியா பரீட்சிக்க உள்ள நீண்ட தூர ஏவுகணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்கொரிய மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன்போது எடுக்கப்பட்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினையின் நிலைப்பாடு மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்கும்

## பழ. நெடுமாறன் தெரிவிப்பு



திருச்சி, பெப். 18

இலங்கைப் பிரச்சினை மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்கும். தமிழகத்தின் பெரிய கட்சிகள் மத்திய அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன என்று மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்திருக்கிறார். இதன் உண்மை நிலைவரம் மக்களவைத் தேர்தலின்போதுதான் தெரியும்.

- இவ்வாறு தமிழகத்தின் பழுத்த அரசியல்வாதியும், ஈழத் தமிழர் ஆதரவாளரும், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளருமான பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியிலேயே இந்தக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி தமிழ் மக்கள் அனைவரும் எரிமலையாகக் கிளர்ந்தெழ வேண்டும். பிரபாகரனை இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த பிரதிநிதியா என்று கேட்கிறார்கள். அங்கு கடந்த இரு நாடாளுமன்றத் தேர்தல்களின்போதும், தமிழ்த் தேசிய முன்னணி அமைக்கப்பட்டு அந்த முன்னணியின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையிலேயே பிரபாகரன்தான் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிநிதி என்று அறிவித்திருக்கின்றனர். இலங்கை மக்களின் முடிவை, இங்குள்ளவர்கள் ஏற்க மறுத்து கேள்வி எழுப்புகின்றனர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டால் முழுத்தமிழ் இன அழிப்புக்கு வழிவகுத்து விடும். ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் மக்களைக் காக்கும் நோக்கம் கொண்டதல்ல. மாறாக இலங்கைக்கு உதவுவதை மீண்டும் உறுதிப்படுத்துவதே.

இலங்கையில் நடைபெற்று வரும் போரை நிறுத்துமாறு, இந்தியா சொல்லுமென்று உலக நாடுகள் எதிர் பார்க்கின்றன.

தமிழகத்தில் மாணவர்கள் போராட்டத்தை முடக்கும் நிலை தொடருமென்றால், அது மாநில அரசுக்கு எதிரான போராட்டமாகவும் மாறும்.

தமிழகத்தின் பெரிய கட்சிகள் மத்திய அரசின் நிலைப்பாட்டை ஆதரிப்பதாக மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்திருக்கிறார். மக்களவைத் தேர்தலின்போதுதான் உண்மை நிலைவரம் தெரியும் - என்றார்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சருமான சமல் ராஜபக்ஷ, இந்தியாவிலுள்ள பீகார் மாநிலம் புத்தகயாவிலுள்ள கோயிலில் நேர்த்திக் கடன் செலுத்தி வழிபடுகின்ற போது.......

# இலங்கை இராணுவம் போரில் பயன்படுத்தும் டாங்கிகள் தமிழகத்தில் தயாரிக்கப்பட்டவை!

## கம்யூ. பாண்டியன் கூறுகிறார்



வேதாரண்யம், பெப்.18

இலங்கைக்கு இராணுவ உதவி அளிக்கவில்லை என மத்திய அரசு கூறிவந்த போதிலும், அங்கு பயன்படுத்தப்படும் ராடார் கருவிகள், டாங்கிகள் இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டவைதான் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன் தெரிவித்துள்ளார்.

வேதாரண்யத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் நிதியளிப்பு பொதுக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசியவை வருமாறு -

இலங்கை இராணுவத்தினரால், விமானங்களை உளவு பார்க்கப் பயன்படுத்தும் ராடார் கருவிகள் இந்தியாவால் அளிக்கப்பட்டன. போரில் பயன்படுத்தப்படும் டாங்கிகள் தமிழகத்தில் உள்ள ஆவடியில் தயாரிக்கப்பட்டவை.

போர் நடைபெறும் பகுதியில் 4 லட்சத்து 70 ஆயிரம் பேர் இருக்கின்றனர் என வன்னிப் பகுதி ஆட்சியர் கூறுகிறார். ஆனால், மஹிந்த ராஜபக்ஷவோ ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் தான் இருகிறார்கள் - என்கிறார்.

இவர் போர் நிறுத்தத்துக்குப் பிறகு, இறந்தவர்களின் எண்ணிக்கையை குறைத்துக் கூறுவதற்காகவே திட்டமிட்டுச் செயற்படுகிறார். இதற்கு இந்தியாவும் உடந்தை.

சர்வதேச நீதிமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்களுக்குத் தண்டனை பெற்றுத் தரும் காலம் விரைவில் வரும் - என்றார்.

# சர்வதேசத்தின் உதவியுடன் தமிழரை படுகொலை செய்கின்றது இலங்கை!

## மனம் வெதும்புகிறார் சிங்களவர் ஒருவர்

கடலூர், பெப். 18

இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுகின்றனர்.

- இவ்வாறு கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்தவரும், இலங்கையைச் சேர்ந்த சிங்களவருமான பிரடி டி அல்விஸ் கவலை தெரிவித்தார் எனத் தமிழக நாளேடு தெரிவித்துள்ளது.

இவர், தாய்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட ஆசிய கிறிஸ்தவ மாநாடு என்ற அமைப்பின் நிர்வாகச் செயலாளராக இருக்கிறார்.

தற்போது இவர் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். கடலூர் ஆற்காடு லூத்தரன் கிறிஸ்தவ தேவாலயத்தில், நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நான் சிங்கள இனத்தைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும், இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள், மனித உரிமை மீறல்களைக் கண்டு மனம் வெதும்பியே செய்தியாளர்களைச் சந்திக்க விரும்பினேன். 1956 முதல் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் தாக்குதல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இலங்கை இராணுவம், அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. அவர்களிடம் 3 லட்சம் தமிழர்கள் சிக்கித் தவிக்கிறார்கள்.

இலங்கைக்கு அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்களை வழங்கி பயிற்சியும் அளிக்கிறது - என்றார்.

# இலங்கைத் தமிழர் மீது பா.ஜ.கவுக்கு திடீர் காதல்; எழுத்தாளர் சோ பேச்சு

சென்னை, பெப். 18

இலங்கைத் தமிழர்கள் மீது பா.ஜ.கவுக்கு திடீர் காதல் ஏற்பட்டுள்ளது - என்று 'துக்ளக்' ஆசிரியர் சோ ராமசாமி கேலி செய்துள்ளார்ர்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலான 'கல்வியே கற்பகதரு' நூலை சென்னையில் நேற்றுமுன்தினம் வெளியிட்டுப் பேசியபோதே அவர் இதைக் கூறினார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நிறுத்துங்கள் என்று போராடும் அளவுக்கு இலங்கைத் தமிழர்கள் மீது பா.ஜ.கவுக்கு காதல் வந்துள்ளது. இந்த நேரத்தில் நரேந்திரமோடியின் புத்தகம் வெளிவந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

காஷ்மீரில் இந்திய அரசின் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு பாகிஸ்தான் சொன்னால் நம்மால் அதனை ஏற்க முடியுமா? நம் நாட்டுக்கு ஒரு சட்டம். இலங்கைக்கு ஒரு சட்டம் என்பதை என்னால் ஏற்க முடியாது. பயங்கரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் நான் எப்போதும் எதிர்ப்பேன்.

பயங்கரவாதத்தை ஜெயலலிதா துணிவுடன் எதிர்த்து வருகிறார், அதற்காக அவரைப் பாராட்டுகிறேன் - என்றார்.

சோ பேசும்போது சிலர், 'தமிழில் பேசுங்கள்' என்று கூச்சலிட்டனர். அதற்குப் பதிலளித்த சோ, எனது கருத்தை எந்த மொழியிலும் சொல்ல எனக்குச் சுதந்திரம் உள்ளது; என்னை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துப் பேசச் சொன்னாலும் இதே கருத்தைத்தான் பேசுவேன் - என்றார். இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# சிதம்பரத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தள்ளிவைப்பு

சென்னை, பெப்.18

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தைக் கண்டித்து சென்னையில் நேற்று நடத்துவதாக அறிவித்திருந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தள்ளிவைத்துள்ளது.

இதுதொடர்பாக அதன் தலைவர் த.வெள்ளையன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு-

ஈழத்தமிழர்கள் போராட்டத்தை இழிவுபடுத்திப் பேசிய மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தை கண்டித்து இன்று (நேற்று) மெமோரியல் அரங்கம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதாக இருந்தோம்.

ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி தருவதாக உறுதி அளித்திருந்த காவல்துறை அதிகாரிகள் திடீரென அனுமதி மறுத்து நோட்டீஸ் கொடுத்துவிட்டனர் என்பதாலும், தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களாலும் இன்று (நேற்று) நடத்துவதாக இருந்த ஆர்ப்பாட்டத்தை தள்ளிவைத்திருக்கிறோம் - என்றுள்ளது.

# மேலும் வலுப்பெறுகிறது தமிழகக் கடலோரப் பாதுகாப்பு இந்தியக் கடற்படைக்கு 2 அதி நவீன போர்க் கப்பல்கள்!

சென்னை, பெப்.18



இந்தியக் கடற்படைக்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில் 2 அதிநவீன போர் கப்பல்கள், சென்னையில் நேற்றுமுன்தினம் அறிமுகம் செய்யப்பட்டன. தமிழகம், புதுச்சேரி கடல் எல்லைகளை இந்தக் கப்பல்கள் கண்காணிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பிராந்திய கடற்பணிக்காக இந்தக் கப்பல்கள் நேற்றுமுன்தினம் அர்ப்பணிக்கப்பட்டன. இவற்றை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி சென்னை துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. 2 கப்பல்களையும் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அறிமுகம் செய்து வைத்தார்.

அப்போது அவர் பேசியவை வருமாறு -

இந்த 2 கப்பல்களும் சென்னையில் பணியமர்த்தப்படுவதன் மூலம், இந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்பு மேலும் பலப்படும். எவ்வளவு விரைவாக எதிரிகள் சென்றாலும் அவர்களை விரட்டி பிடிக்கும் நவீன வசதிகள் இவற்றில் உள்ளன.

தேசப் பாதுகாப்பு பணிக்காக தற்போது வீரமுள்ள இளைஞர்கள் தேவைப்படுகின்றனர். இதுபற்றி இளைஞர்களிடையே விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். இராணுவத்தில் வேலைக்குச் சேர்வதற்கு இளைஞர்களுக்கு முதியவர்கள் ஊக்கம் அளிக்க வேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் கடற்படை உயர் அதிகாரிகள் 'வைஸ் அட்மிரல்' நிர்மல் குமார் வர்மா, போர் கப்பல் கட்டும் கொல்கத்தா நிறுவனத்தின் (ஜி.ஆர்.எஸ்.இ) தலைமை நிர்வாக இயக்குநர் கே.சி.சேகர் ஆகியோர் பேசியவை வருமாறு -

ஊடுருவல், கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பது, மீனவர்களுக்கு தேவையான பாதுகாப்பை அளிப்பது, கடலில் தத்தளிப்போரைக் காப்பாற்றுவது, இரவு, பகலாக ரோந்துப் பணியில் ஈடுபடுவது போன்ற பணிக்கு இந்தக் கப்பல்கள் மிகவும் உதவும். 13 இயந்திர துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

நீரில் வேகமாகச் செல்வதற்காக 'ஜெட் புரொப்பல்லர்' என்ற நவீன ரகத்தில் வடிவமைக்கப்பட்ட கப்பல்கள் இவை. இந்த ரக கப்பல்கள், இந்தியக் கடற்படைக்காக முதன் முறையாகத் தயாரிக்கப்பட்டு உள்ளன. ஒரே நேரத்தில் 2 கப்பல்கள் அறிமுகம் செய்யப்படுவதும் முதன் முறையாகும். முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை இவை.

இந்த 2 போர் கப்பல்களையும் சேர்த்து தென் பிராந்திய போர் கப்பல்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு கப்பலிலும் ஒரு கொமாண்டர், 4 அதிகாரிகள், 35 வீரர்கள் இருப்பார்கள். கடலுக்குள் 20 நாள்கள் தங்கி இருக்கும் வசதி, அந்தக் கப்பல்களில் உள்ளன - என்றானர்.

# சட்டக்கல்லூரிகளைத் திறக்காதமை ஏன்? பதிலளிக்க அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு

சென்னை, பெப். 18

சட்டக் கல்லூரிகளை ஏன் திறக்கவில்லை என்பது குறித்து இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

சட்டக் கல்லூரி மாணவர் கே.ஏ. பிரபாகரன் என்பவரால் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு வந்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த மனுவின் விவரம் வருமாறு -

டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் நான்காம் ஆண்டு படித்து வருகிறேன். பொங்கல் விடுமுறைக்குப் பிறகு எங்கள் கல்லூரி ஜனவரி 19ஆம் திகதி தொடங்கப்பட்டது.

இந்த நிலையில் ஈழத் தமிழர் பிரச்சினையில் மாணவர்களிடையே அமைதியின்மை நிலவுவதால், அரசு மற்றும் தனியார் கல்லூரிகளை காலவரையறையின்றி மூட வேண்டும் என்று ஜனவரி 31ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

மாணவர்களிடையே அமைதியின்மை நிலவினால், கல்லூரி வளாகத்தில் பாதுகாப்பு அளித்திருக்க வேண்டும்; கல்லூரிகளை மூடுவதற்கு அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இந்த உத்தரவால் மாணவர்களின் கல்வி பெறும் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசு உத்தரவை ரத்து செய்ய வேண்டும் - என்றுள்ளது.

இந்த மனு நீதிபதி பி.கே. மிஸ்ரா, நீதிபதி கே. சந்துரு ஆகியோர் கொண்ட ஆயம் முன் நிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ராஜவேலாயுதம், சட்டக் கல்லூரிகள் மட்டும் திறக்கப்படவில்லை. இதனால், மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே, உடனடியாக சட்டக் கல்லூரிகளை திறக்க உத்தரவிட வேண்டும் என்று கோரினார். இதுதொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# முதல்வருடன் காங். தலைவர்கள் மருத்துவமனையில் திடீர் சந்திப்பு

சென்னை, பெப். 18

மருத்துவமனையில் முதல்வர் கருணாநிதியை காங்கிரஸ் தலைவர்கள் ஜி.கே.வாசன், டி.சுதர்சனம் ஆகியோர் திடீரென சந்தித்துப் பேசினர்.

மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை இரவும், சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் டி.சுதர்சனம் திங்கட்கிழமை மாலையும் முதல்வர் கருணாநிதியை சந்தித்துப் பேசினர்.

அறுவைச் சிகிச்சைக்குப் பின், மருத்துவமனையில் ஓய்வெடுத்து வரும் முதல்வர் கருணாநிதியை 10 நாள்களுக்கு யாரும் பார்க்க வரவேண்டாம் என்று தி.மு.க. பொதுச் செயலாளரும், நிதியமைச்சருமான க.அன்பழகன் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை குறித்து விவாதிக்க வாசனையும், சுதர்சனத்தையும் கருணாநிதி அழைத்துப் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்ட அம்பலவன்பொக்கை, தேவிபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கும் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# சுப்பிரமணியசுவாமி மீது நீதிமன்றத்தில் வைத்து சட்டத்தரணிகள் முட்டை வீசித் தாக்குதல்!

## நீதிபதி முன்னிலையில் நடத்தப்பட்டது!!

சென்னை,பெப்.18

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி மீது உயர்நீதிமன்ற அறையில் சட்டத்தரணிகள் முட்டை வீசி தாக்குதல் நடத்தியமை பரபரப்பை ஏற்படுத்தியது. இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்த வேண்டும் என்று கோரி சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் நீதிமன்ற புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அவர்கள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் சிதம்பரம் நடராஜர் கோயிலை, அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்துப் பொதுத் தீட்சிதர்கள் சார்பில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை மூன்றாவது நீதிமன்ற அறையில் நடைபெற்றது.

இந்த வழக்கில் தன்னையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி மனுதாக்கல் செய்தார். இதற்காக அவர் நீதிமன்றத்திற்கு வருகை தந்தார்.

நீதிபதிகள் பி.கே.மிஸ்ரா மற்றும் கே.சந்துரு தலைமையிலான 'டிவிஷன்' பெஞ்ச் முன் இந்த வழக்கு நடைபெற்றது. அப்போது திடீரென 20இற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக கோஷங்களை எழுப்பியவாறு நீதிமன்ற அறைக்குள் வருகை தந்தனர்.

தொடர்ந்து அவர்கள் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அவர்களில் சிலர் முட்டைகளை எடுத்து சுப்பிரமணிய சுவாமி மீது வீசினர். முட்டைகள் உடைந்து சுப்பிரமணிய சுவாமியின் கை மற்றும்.உடல் முழுவதும் சிதறின. இதனால் அவர் திடுக்கிட்டுப் போனார்.

நீதிபதிகள் கண்முன் நடைபெற்ற இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உடனே பொலிஸார் விரைந்து வந்தனர். ஆனால் சட்டத்தரணிகள் கதவைச் சாத்த முற்பட்டனர். மேலும் பொலிஸாரை எதிர்த்து அவர்கள் கோஷமிட்டனர். இதற்குள் பொலிஸார் உள்ளே வந்துவிட்டனர். சட்டத்தரணிகளின் செயல் நெறிமுறை மீறியது என்று நீதிபதிகள் கூறினர். பின்னர் கோஷமிட்ட வழக்கறிஞர்களை பொலிஸார் வெளியேற்றினர்.

இதனிடையே சுப்பிரமணிய சுவாமியின் சட்டத்தரணிகள் அவரை பாதுகாப்பாக அழைத்துச்சென்று நீதிபதி இருக்கை அருகே அமர வைத்தனர். சுப்பிரமணியசுவாமி இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிபதிகளிடம் முறையிட்டார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த சம்பவத்தால் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது. நீதிமன்ற வளாகத்தில் பொலிஸார் குவிக்கப் பட்டனர். இந்தச் சம்பவத்தை அடுத்து வழக்கு விசாரணை இன்று ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுப்பிரமணிய சுவாமி கூறியவை வருமாறு:-

தமிழகத்தில் சட்டப் படி ஆட்சி நடக்கவில்லை; சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. அதனைத்தான் என் மீதான தாக்குதல் சம்பவம் உணர்த்துகிறது. ஜனநாயகம் என்பது வேறு; விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிப்பது வேறு.



விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக இங்குள்ள தமிழர்களின் உரிமை பாதிக்கப்பட கூடாது. தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு கெட்டுவிட்டது. இந்த அரசு கலைக்கப்பட வேண்டும்.

நாளை (இன்று) நான் இந்த வழக்கில் ஆஜராக வருவேன். தமிழக அரசு உரிய முறையில் செயல்பட்டால் என் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து எனக்கு முழுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (சி)

## சன் ரி.வி மறுஒளிபரப்பு நிலையத்தின் 4 ஊழியர்கள் வவுனியாவில் கைது

தமிழகத் தொலைக்காட்சியான சன் ரி.வியின் வவுனியாவில் உள்ள மறு ஒளி பரப்பு நிலையத்தின் ஊழியர்கள் நால்வரை நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். அத்துடன் அந்நிலையத்தில் இருந்த முக்கிய கருவிகளையும் அவர்கள் எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் நால்வரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின்பேரிலும் மறு ஒளிபரப்பிற்கான அனுமதிப்பத்திரம் இல்லாமையினாலுமே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட் டுள்ளது. (சி)

# பொய்வாக்குறுதி கொடுத்தும், ஏழைகளை மிரட்டியுமே மாகாண சபைத் தேர்தல்களில் அரசு வெற்றியீட்டியது

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 18

கொரியா, சைப்ரஸ் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத்தரப் போவதாக பொய் வாக்குறுதி வழங்கியும் ஏழை மக்களுக்கான சமுர்த்தி நிவாரணத்தை வெட்டிவிடப்போவதாக மிரட்டியுமே அரசு மாகாண சபைத் தேர்தலில் மக்களிடமிருந்து வாக்குகளை அபகரித்துத் தேர்தலில் வென்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் கூறியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரிச்சட்டமூலம் ஒன்றின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சி எம்.பி. கபீர் ஹாசீமே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் வர்க்குகளைப் பெறுவதற்காக அரசு கவர்ச்சிகரமாக பெரும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

மக்களை ஏமாற்றும் வகையில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை அரசு வழங்கியது. பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. லிபியா, சைப்பிரஸ் மற்றும் கொரியா போன்ற நாடுகளில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுத்தரப்போவதாக வாக்குறுதியளித்து அவர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்களை அரசு பெற்றுக்கொண்டது.

அரசுக்கு வாக்களிக்காவிட்டால் அப்பாவி ஏழை மக்களின் சமுர்த்தி நிவாரணத்தை வெட்டிவிடப்போவதாக அரசு மக்களை மிரட்டியது.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் லட்சக்கணக்கானோருக்கு விருந்துபசாரங்களை வழங்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு பச்சை நிறத் தொப்பிகளை அணிவித்து அவர்களை ஊர்வலமாக அழைத்துச்சென்றது.

அத்தோடு சேர்த்து பிரதானமாக படைவீரர்கள் இரத்தம் சிந்திப் பெற்ற யுத்த வெற்றிகளையும் பெரியளவில் பிரச்சாரப்படுத்தியது.

இவ்வாறு மக்களின் பெருந்தொகையான பணத்தை வீண்விரயம் செய்து பெரும் பகட்டுக்காட்டியே அரசு இத்தேர்தலில் வென்றது - என்றார்.

# பதான் பிரதர்ஸ் மீண்டும் கலக்கல்

மேற்கு மண்டல ரஞ்சிக் கோப்பை ஒரு நாள் போட்டியில் யூசுப் பதானின் சதத்தால் பரோடா அணி வெற்றிபெற்றது. அவரது சகோதரர் இர்பான் பதான் அதிரடியாக ஆடி 51 ஓட்டங்களை குவித்தார். ராஜ்கோட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பரோடா அணி வெற்றிபெற 279 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பரோடா அணியில் யூசுப் பதான் 72 பந்துகளில் 101 ஓட்டங்களை குவித்தார். இதன் காரணமாக அந்த அணி அபாரமாக வெற்றி பெற்றது. 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறினாலும், யூசுப் பதானின் அபார ஆட்டம் காரணமாக பரோடா வெற்றி பெற்றது. அவரது சகோதரர் இர்பான் பதான் 51 ஓட்டங்களை விளாசினார். இந்த இருவரும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

முன்னதாக மும்பை அணி சார்பில் அதன் அணித்தலைவர் வாசிம் ஜாபர் 131 ஓட்டங்களைக் குவித்தார். ரோஹித் சர்மா 37 ஓட்டங்கள் எடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 லட்சத்துக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

வடக்கே தாம்பரத்தில் தொடங்கி செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, திருச்சி, திண்டுக்கல், வாடிப்பட்டி, மதுரை, விருதுநகர், கோவில்பட்டி, நெல்லை, வள்ளியூர், நாகர்கோவில் வழியாக தெற்கே கன்னியாகுமரி வரை கிட்டத்தட்ட 717 கிலோ மீற்றர் தொலைவுக்கு முதல் அணிவகுப்பு நடைபெற்றது.

மேற்கே கோவையில் தொடங்கி திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கரூர், குளித்தலை, திருச்சி, தஞ்சாவூர், நீடாமங்கலம், நாகப்பட்டினம் வரை 352 கிலோ மீற்றர் தொலைவுக்கு 2 ஆவது மனிதச் சங்கிலி அணிவகுப்பு இடம் பெற்றது.

3ஆவது அணிவகுப்பு புதுச்சேரியில் தொடங்கி கடலூர், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, தரங்கம்பாடி, காரைக்கால், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, பரமக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம், கடலாடி வழியாக தூத்துக்குடி வரை நடைபெற்றது.

கிட்டத்தட்ட 500 கிலோ மீற்றர் நீளத்திற்கு இந்த மனிதச் சங்கிலி நீண்டிருந்தது. இது தவிர மற்ற பகுதிகளில் ஏறக்குறைய 500 கிலோ மீற்றர் தொலைவுக்கு மனிதச் சங்கிலி அமைக்கப்பட்டிருந்தது.

அரசியல் தலைவர்கள் பேரணியில்

தாம்பரம் முதல் கன்னியாகுமரி வரை அமைக்கப்பட்ட மனிதச் சங்கிலியில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் கோ.க.மணி, அக்கட்சியின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் கண்ணப்பன், துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்தியா, "பு[illegible]ப பார்வை" ஆசிரியர் ம.நடராசன், திண்டிவனம இராமமூர்த்தி உள்ளிட்டோர் தாம்ப[illegible] கலந்து கொண்டனர்.

## வன்னியில் நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களிலேயே பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ள னர் என்றும் இணையத்தளங்களில் கூறப்பட்டுள்ளது.

ஷெல் தாக்குதல் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

புதுக்குடியிருப்பு பகுதியில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட 3 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

பாலகுமார் விதுசா (வயது - 14), தயாணந்தன் அம்பிகா (வயது - 44), சசிக்குமார் ஸ்யேயன் (வயது - 60) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் பிற்பகல் 2 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 6 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

விக்கினேஸ்வரன் கஜனி (வயது - 07), சசிக்குமார் தேனிலவன் (வயது - 05), பாலகுமார் விதுசா (வயது - 16), தயானந்தா அம்பிகாவதி (வயது - 45), தவம் பெனடிற் (வயது - 61) மற்றும் சின்னத்தம்பி (வயது - 61) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ரவீந்திரன் றோஜினி, த.சுபாசினி, தர்மலிங்கம் ஜெனி, தர்மலிங்கம் அஜந்தன், சு.ஞானாம்பிகா, சோமசுந்தரம் விக்கினேஸ்வரராஜா, விக்கினேஸ்வரராஜா கரன், அரவிந்தன், கந்தையா முத்துக்குமார், க.நந்தினி, சிவச்செல்வன், த.வனஜா, த.அரவிந்தன், த.கிநிசா, பாலராசா, சந்திரகுமார் மற்றும் சித்திரவேல் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

தேவிபுரத்தில் 28 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளனர். வள்ளிபுனத்தில் 4 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

அம்பலவன்பொக்கணை மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 56 பேர் காயமடைந்துள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## வன்னியில் இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"தினமும் விமானக்குண்டுவீச்சு, ஆட்லறி பல்குழல் பீரங்கித் தாக்குதல் என்பவற்றால் மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடந்த டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 17 ஆம் திகதிவரை யான இரண்டு மாத காலப்பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதலில் இரண்டா யிரம் பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். சுமார் 4 ஆயிரத்து 500 பேர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்" என்று அவர் கூறினார்.

## திருமலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இதுவரை வவுனியாவில் இருந்து ஓமந்தை ஊடாக உலக உணவுத்திட்டத்தின் வாகன அணி மூலம் உணவுப் பொருள்கள் வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

ஆனால் முல்லைத்தீவில் மோதல்கள் அதிகரித்தும் தொடர்ந்தும் நடைபெறுவ தால் தரைவழியாக அத்தியாவசியப் பொருள் கள் வன்னிக்கு எடுத்துச்செல்வது கடந்த ஒரு மாத காலமாகத் தடைப்பட்டிருந் தது.

இப்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தியதன் பய னாக, கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் இன்று எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது. (அ-1-151)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள புதுமாத்தளன் வைத்தியசாலையில் காயப்பட்டிருந்த 440 பேர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கப்பலில் கொண்டுவரப்பட்டனர்.

திருகோணமலை வைத்தியசாலையில் உள்ள காயமடைந்தவர்களின் உறவினர்களுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும், இளைஞர் செஞ்சிலுவைக் குழுவும் இணைந்து தொடர்புகளை மேற்கொண்டு அறிவித்து வருகின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டிருக்கின்றன. (சி)

## தமிழ் மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதப் பேரவலமும் கொடுமைகளும் நடந்தேறுகின்றன. ஆகையால் போரை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் தொடங்கப் பட வேண்டும். ஆனால் பொதுமக்களின் நிலை குறித்து கவலை வெளியிடும் தரப்புக்கள் போரை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை தூண்ட வேண்டும்.

அவ்வாறின்றி, துரதிஷ்ட வசமாக, சர்வதேச சமூகத்தினர் போர் தொடந்து நடைபெற அனுமதித்துக் கொண்டு, மக்களது நிலை குறித்தும் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் இரட்டை வேடம்

கொழும்பு அரசு நடத்தும் போரை நியாயப்படுத்திக் கொண்டு, மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து கவலை தெரிவிப்பது அடிப்படையில் தவறானதாகும்; இரட்டை வேடம் போடுவதாகும்.

ஐ.நா. சபை இந்தத் தவறான வாய்பாட்டை மாற்றிக் கொள்ள வேண் டும். அவ்வாறு செய்வதன் மூலமே மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதைத் தடுப்பதோடு மட்டு மன்றி இலங்கை முழுவதிலும் மனித உரிமைகளையும் காப்பாற்ற முடியும்.

தாக்குதலுக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சம், உணவு, மருந்து, குடிதண்ணீர், தமது சொந்தக் கிராமங்களுக்கு பயமின்றித் திரும்புதல் என்பனவே வன்னி மக்களின் உடனடிக் கவலைகளும் தேவைகளும் ஆகும்.

மக்களின் மேற்படி நலன்களுக்கு எதிராக விடுதலைப்புலிகள் செயற்பட வில்லை. தற்காலிகப் போர் நிறுத்தத்துக்குக் கூட அரசாங்கம் தயாரில்லை என்பதனை ஐ.நா. நன்றாக அறியும். அதனால் மக்களின் கவலைகள் குறித்து அக்கறை வெளியிடும் போது பிழையான தரப்பின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறது.

மக்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தங்குகிறார்கள் என்பது அக்கறை உள்ள சகல தரப்புக்களுக்கும் தெரியும்.

அந்த மக்களைத் தான் கைப்பற்றிக் கொள்வதற்காகவே அரசு அவர்களைப் பய முறுத்தியும், கொலை செய்தும், காய முற வைத்தும் அத்தியாவசிய தேவைகளை வழங்காமலும் மறுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கையின் ஓர் அம்சமாகவே எரிகுண்டுகள், கொத்துக்குண்டுகள் உட்பட்ட தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றது.

தவறான கொள்கை

கொழும்பு அரசாங்கத்தை கண்டிக்கும் போதெல்லாம் - முதலில் விடுதலைப் புலிகளைக் கண்டித்து அதன் தொடர்ச்சி யாகவே அரசாங்கத்தை கண்டிக்கும் தவ றான ராஜதந்திர கொள்கையைச் சர்வதேச முகவர்களும் ஊடகங்களும் கடைப்பிடிக் கின்றன.

இப்போதைய நெருக்கடியை நீக்குவதற்கு இவ்வாறு அணுகுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறு எதனையும் அடைய முடியாது.

ஆகையால், சர்வதேச சமூகம் கொழும்பு அரசின் நடவடிக்கைகளை பயனுள்ள முறையில் குற்றச் சாட்டுக்களாக முன்னிலைப்படுத்த முன்வரவேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கப்பல் சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று இரவு தெரிவித்தது.

கப்பலில் பயணம் செய்யவிருப்பவர்களை இன்று காலை ரயில்நிலைப் பகு திக்கு வருமாறு கேட்டுள்ளது. (அ-1)

## ஒருங்கிணைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. எனினும்-

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வரவிருந்த வடக்கு மகாண ஆளுநர் டக்சன் சரத்சந்திரலாவின் விஜயம் திட்டமிட்டபடி நாளை இடம் பெறும் என்று மாகாண சபை வட்டாரங்கள் "உதயனு"க்குத் தெரிவித்தன.

ஒருநாள் விஜயமாக வரும் ஆளுநர் திணைக்களத் தலைவர்களுடன் கலந் துரையாடல்களை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## இரு தரப்புக்களும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் சிறைவைப்பு

வன்னியிலிருந்து வரும் மக்கள் வவுனியாவில் படும் துன்பம் கொஞ்சமல்ல. அங்கு மக்கள் சிறைவைக்கப்படுகின்றார்கள். முகாம்கள் அனைத்தும் 6 மணிக்கு மூடப்படுகின்றன. மக்கள் வன்னியிலிருந்து வருவதும் வராததும் அவர்களைப் பொறுத்தது. அது அவர்களின் விருப்பம். ஆனால் வருகின்ற மக்களை அரசு சிறையில் அடைத்தது போலவே வைத்திருக்கிறது.

அரச அதிபரின் புள்ளி விவரப்படி வன்னியில் 4 லட்சம் மக்கள் இருந்தனர். இதுவரை 50 - 60 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந் திருந்தாலும் குறைந்தது மூன்று லட்சம் மக்கள் அங்கு உள்ளனர். ஆனால் ஒரு லட்சம் பேர்தான் உள்ளனர் என்று அரசு பொய் சொல்கிறது.

இது தொடர்பான உண்மை வெளியில் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே அரசு வன்னிப்பகுதிக்குள் ஊடகவியலாளர்களை அனுமதிப்பதில்லை. சிங்கள மக்களுக்கு வன்னியில் நடக்கும் உண்மை தெரியாது. அவர்கள் அதனை அறியவேண்டும்.

புலிகள்தான் மக்களைக் கொல்கின்றார்கள் என்று அரசு குற்றஞ்சாட்டுகின்றது. அதனை நாங்கள் நம்பவில்லை. புலிகள் ஒருபோதும் மக்களைக் கொல்லமாட்டார்கள். அங்குள்ள மக்களைப் பாதுகாப்பதற்காக உடனடியாக இருதரப்பும் யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். யுத்தத்தை நிறுத்திவிட்டு தமிழ் மக்களும் சர்வதேசமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அரசு முன்வைத்தால் அதனை நாமும் ஏற்றுக்கொள்வோம். அதற்காக அரசுக்கு ஆதரவு வழங்குவோம் - என்றார். (அ-சி)


DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...

பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்

ஆரம்பம் :- 21.02.2009

Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

Trinity College & University
Representation Office
Sri Lanka

Important Message From Sri Lankan Representative

மேற்படி பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான ஏகபிரதிநிதியாக பல வருடங்களாக செயற்பட்டுவரும் Dr.N.Kumaragurparan ஆகிய நான் யாழ் மாவட்டத்தில் இதுவரை வேறு எவரையுமோ அல்லது எந்தவொரு நிறுவனத்தையுமோ எமது பல்கலைக்கழக இணைப்பாளராக நியமிக்கவில்லை. சில நிறுவனங்களது தவறான வழிகாட்டுதலை தவிர்க்கும் நோக்குடன் தற்போது எமது பல்கலைக்கழகத்தின் வடமாகாண இணைப்பாளராக திரு.S.செல்வதாசன் அவர்களை நியமித்துள்ளேன். எனவே எமது பல்கலைக்கழகம் சம்பந்தமான அனைத்து விடயங்களையும் இவரிடம் இருந்து பெற்று உங்கள் பட்டப்படிப்பினை தொடரும்படி வேண்டுகின்றேன். எமது பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்தபின்னர், தற்போது Association of Computer Professionals (U.K) சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும். -நன்றி-

Please Call Me :- - 011 - 4574930 / 0777 - 777523
Call North Coordinator - 0777 - 110862 / 060 221 6433

DMI இல் A/L- 2011
இந்து சமயம் ஜோதீஸ்வரன்
இந்து நாகரிகம் ஜோதீஸ்வரன்
DMI நாவலர் வீதி, யாழ்.

Scc யின் கணினி பயிற்சி நெறிகள்
பயிற்சி ஆரம்பம் 21.02.2009, 23.02.2009
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
♦Adobe Photoshop ♦Adobe Premier ♦Cool3D Studio ♦pinnacle Studio ♦VCD Cutter ♦ Capturing
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
♦Tally ♦Quick Books ♦Accpack ♦MYOB
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN VISUAL BASIC
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

CIMA MCS
Supported By UNDP/JRRP
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
காலம்: 22 பெப்ரவரி 2009 மாலை 1 மணி
பதிவுகளை 21.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction, Bus Root-764

தொழிற்பயிற்சிகள்
★ Mobile Phone repairing
Hard ware Phone Lock
Soft ware Hard ware Repairing
★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பயறிங்
றேடியோ, வீடியோடெக், DVD Player
ரெலிவிசன், CD Player, Amplifier
திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்
★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
புதிய பயிற்சிகள் ஆரம்பம்:- 21.02.2009 சனி 11am.
குறிப்பு:- தொழில் புரிவோர்களுக்காக இம்முறை சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும்
தொடர்பு JAFFNA TECHNICAL INSTITUTE
இல, 45 மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவில் முன் வீதி)
யாழ்ப்பாணம் ☎ 021 222 6436 அல்லது NEWASIN CENTER
56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0718561654, 0779254078


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org